இன்று
மங்களகரமான
திறப்பு விழா
சுபவேளை
காலை 9.00 — 9.25
சோபிகா
ஜுவல் ஹவுஸ்
111-1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/=

சோபிகா
ஜுவல் ஹவுஸ்
காலை
9.00 — 9.25
சுபவேளையில்
மங்களகரமாகத்
திறந்து வைக்கப்படுகிறது.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
R. செல்வராஜா

மலர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 12 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 14 (25-01-1986) - SANJEAVY - A REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-1

★ நாயன்மார்கட்டு, கல்வியங்காடு, கைதடி அரியாலைப் பகுதிகளில் பதற்றம் பாதிப்பு

# நாவற்குழியில் தீப்பிழம்பாய் விழுந்த குண்டுகள்!

## இரவு நேரக் கடும் மோதலால் மக்கள் வேறிடம் குடிபெயர்வு

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜன. 25

நாவற்குழியில் நேற்றிரவு சுமார் இரண்டரை மணி நேரமாகப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் கடுஞ் சமர் நடந்தது.

அதன் இறுதிக் கட்டத்தில் வானத்தில் ஹெலிக்கொப்டரிலிருந்து கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போது குண்டுகள் தீப்பிழம்புகளாக நாலா பக்கமும் சிதறிப் பாய்ந்தன. வானத்திலிருந்துவந்த தீக் குண்டுகள் கைதடி, அரியாலை, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு ஆகிய பகுதிகளிலும் வந்து விழுந்தன. அதனால் அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பீதி கொண்டு இரவோடு இரவாக வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர்.

இரவு நேரமாதலால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய எவ்வித தகவலையும் பெறமுடியவில்லை.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது அரியாலையைச் சேர்ந்த ஒருவர் காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுமாலை சுமார் 6 மணியளவில் நாவற்குழி முகாமில் இருந்து ஆயுதப்படையினர் கைதடி வீடமைப்புத்திட்டப்பக்கமாக நடைபவனியாகப் புறப்பட்டார்கள்.

அங்கு போராளிகள் அவர்களை எதிர் கொண்டார்கள்.

இருதரப்பினருக்கும் இடையில் கடும் மோதல்கள் நடந்தன. ஒரு கட்டத்தில் படையினர் முகாமை நோக்கிச் சென்றார்கள்.

இதன் பின்னர் மாலை 6.30 மணிமுதல் நாவற்குழி முகாமிலிருந்து கைதடிப் பக்கம் நோக்கி பெரும் சத்தத்துடன் தொடர்ந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

இரவு 8.30 மணி வரை குண்டுகள் வேட்டுகள் இருபக்கத்தாலும்

(8ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவியின்
நாளிதழ்
உதயன்

★ தெல்லிப்பளை, வயாவிளான், பலாலியில்

# நேற்றும் தாக்குதல்

## ஹெலிக்கொப்டரிலிருந்து

பலாலி, ஜன 25

தெல்லிப்பளை, பலாலி, வயாவிளான் பகுதிகளில் நேற்று மீண்டும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டன.

ஹெலிக்கொப்டரை நோக்கி ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து ஹெலிக்கொப்டரிலிருந்து சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நேற்றுக்காலை 9-09 மணியளவில் பலாலி விமான நிலையத்தில் இறங்க முயற்சித்த விமானம் ஒன்றுக்கு பாதுகாப்பளித்து அங்கு வட்டமிட்டுக் கொண்டிருந்த ஹெலிக்கொப்டரை நோக்கி முதலாவது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

இதனையடுத்து விமான நிலைய ஓடுபாதையிலும் அதை அண்மித்த பகுதியிலும் பதுங்கியிருந்த பாதுகாப்புப் படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

இதனால் வயாவிளான், தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகள் நேற்று தொடர்ந்து இரண்டாவது நாளாக பதறின.

இதன் பின்னர் நண்பகல் 12. 30 மணியளவில் தெல்லிப்பளைச் சந்தியை சுற்றி வந்த மற்றொரு ஹெலிக்கொப்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் விளைவாக தெல்லிப்பளையில் கே.கே.எஸ். வீதியையும் அதை அண்டிய பகுதிகளையும் நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பாதுகாப்புத் தேடி ஓடி ஒதுங்கிய இரண்டு பேர் மீதும் சூடுகள் விழுந்தன. தலையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது.

வியாழக்கிழமை துப்பாக்கிச் சூட்டுச் சம்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

ரெக் என்ஜினியர்ஸ் அன்ட் கொன்ராக்டர்ஸ்
குழாய்க் கிணறுகள்
குழாய்க் கிணறுகள் நவீன இயந்திரம் மூலம் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் தேவைக்கேற்ற தண்ணீர்
24 மணித்தியாலமும்
பெறக்கூடியதாக அமைத்துத் தரப்படும்.
தொடர்புகொள்ளவும்:
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் வடக்கு.
(உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக)
கிளை:
கொடிகாமம் சந்தி,
நெல்லியடி, கரவெட்டி.
(தபாலகத்திற்கருகாமையில்)

# தமிழ் அகதிகள் பற்றி

## சுவிஸ் அரசு விரைவில் முடிவு

பேர்ன், ஜன 24

அரசியல் தஞ்சம்கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது பற்றி சுவிற்சாலாந்து அரசு விரைவில் தீர்மானிக்க உள்ளது.

இத்தகவலை சுவிஸ் நீதி அமைச்சர் செல்வி எலிஸபத் ஹொப் வெளியிட்டார்.

இலங்கையில் தமிழ்மக்கள் படும் இன்னல்கள் பற்றிய முறை முறையீடுகள் குறித்து நேரில் சென்று விசாரணை நடத்த இரண்டு சுவிஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்.

அவர்கள் அங்கு விசாரணைகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பி விட்டனர்.

அவர்களின் அறிக்கையையும்,—

இலங்கையில் சித்திரவதைகள் இடம்பெறுவதால், தமிழ் அகதிகளை அங்கு திருப்பி அனுப்பக்கூடாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள வேண்டுகோளையும் சுவிஸ் அரசு முதலில் நன்றாகப் பரிசீலனை செய்யும்.

அதன் பின்னர் சுவிஸ் அரசு தனது முடிவை மேற்கொள்ளும்

இப்படி நீதி அமைச்சர் செல்வி எலிஸபத் சொன்னார்.

### ஞாயிறில் யாழ்தேவி

கொழும்பு, ஜன. 25

எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் இன்டர்சிற்றிக்குப் பதிலாக யாழ்தேவி ஓடும்.

இந்த மாற்றத்தோடு இனிமேல் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் இன்டர்சிற்றியும்— ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிழமைகளில் யாழ்தேவியும் சேவையில் ஈடுபடும்

### நாயாறில் 11 பேர் காயம்

கொழும்பு, ஜன. 25

முல்லைத்தீவு, நாயாறுப் பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை படையினர் ஹெலிக்கொப்டரிலிருந்து சுட்டதில் 11 பேர் காயம் அடைந்தனர்.

பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டரை நோக்கிப் போராளிகள் சுட்டதாகவும் அதைத் தொடர்ந்து படையினர் பேலிருந்து சுட்டதாகவும் அறிய வருகிறது.

மேலதிக விவரங்கள் எதுவும் தெரியவில்லை.

### பூஸாவுக்கு

கொழும்பு ஜன. 25

மட்டக்களப்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட 102 தமிழ் இளைஞர்கள் விரைவில் பூஸா இராணுவ தடுப்பு முகாமுக்குக் கொண்டுவரப்பட உள்ளார்கள்.

### சுபநேரம்

25.1.1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3.36 முதல் 5.06 வரை

ராகுகாலம்:
9 36 முதல் 11.06 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பூரணை விரதம்


### அமரரின் ஆசை

எமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்திலிருந்து முழுமை நிறைந்த தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவர வேண்டும்.

அவை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்க வேண்டும். அவர்களின் இன்னல்களையும் குறைகளையும் களைய அந்தப் பத்திரிகைகள் பாடுபட வேண்டும்.

தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும்,விருத்திக்குமாக, அதன் வளங்களையும் வாய்ப்புக்களையும் முழு அளவிலும் கண்டறிந்து, அவற்றை ஆற்றுப்படுத்திப் பயன் பெறத் துணைபுரிய வேண்டும்.

அமரர் க. சண்முகத்தின் இந்த ஆரம்ப ஆசைகள் பின்னர் இலட்சியங்களாக பாறி மலரும் தறுவாயில்.....



அவரை ஆண்டவன் அழைத்துக் கொண்டான்.

அமரரது ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எங்கள் விருப்பம் செயலுருப் பெற்று உதயன்–சஞ்சீவியாக மலர்ந்துவிட்டது நாம் செய்த பாக்கியமே.

அவரது ஆன்மா எம்மை எப்போதும் வழி நடத்திச் செல்வதாக.

### அறிமுகம்

அன்பார்ந்த தமிழ் பேசும் பெருமக்களே!

உதயன் (புதிய தமிழ் நாளிதழ்) உதித்து நாளை இரண்டு மாதங்கள் பூர்த்தியாகின்றன. அந்த மிக மிகக் குறுகிய கால எல்லைக்குள் உதயனுக்கு மக்கள் காட்டும் ஆதரவும், அவன்பால அவர்கள் கொண்டுள்ள அபிமானமும் எமக்குப் பெருமகிழ்வைத் தருகின்றன. அதன் பொருட்டு உதயன் வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உதயனின் வாரஇதழ் சஞ்சீவி. உதயன் வெளிவந்த அதே வார இறுதியில் சஞ்சீவியையும் வெளியிடுவதென்றே முதலில் திட்டமிட்டிருந்தோம். எனினும் எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்களால் அவ்வாறு செய்யக்கிடைக்கவில்லை. சஞ்சீவியை வெளியிடுவதை எட்டு வாரங்கள் தவிர்த்துக் கொண்டமைக்கு எங்களை மன்னிக்கும் வண்ணம் அன்பு கொண்டு வேண்டுகிறோம். அந்த எட்டு வாரங்களும் பொறுத்துக்கொண்ட உங்களுக்கு எங்கள் நன்றி.

சஞ்சீவி சனிக்கிழமை தோறும் வெளிவரும்.

தமிழ் மரபுப்படியும், சோதிட முறைப்படியும் ஞாயிற்றுக்கிழமைதான் வாரத்தின் முதல் நாள். சனிக்கிழமையே கடைசிநாள். அதாவது வார இறுதி நாள் சனிக்கிழமை தான். அதனாலேயே "உதயன்"ன் வார இதழான சஞ்சீவியைச் சனிக்கிழமைகளில் வெளியிடத் தீர்மானித்தோம்.

சஞ்சீவி ஏனைய வாரத் தமிழ்ப் பத்திரிகைகளைவிட முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கும். அதன் பொருளடக்கம், அமைப்பு ஆகியவற்றில் புதுமை பொலியும்.

தமிழ் மக்களின் பொருளாதார விருத்திக்கும், தமிழ் மண்ணின் அபிவிருத்திக்கும் எமது கலை, கலாசார மறுமலர்ச்சிக்கும் உதவுவதே சஞ்சீவியின் பிரதான நோக்கமாக இருக்கும்.

எனினும் வாசகர்களின் அறிவு வளர்ச்சிக்கும், அந்த அறிவை ஆக்கப்படுத்துவதற்கும் தேவைப்படும் சகல அம்சங்களையும் சஞ்சீவி தவறாது தரும்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களின் ரசனைக்கும் ஏற்ற சுவையுள்ள அம்சங்களை வழங்கவும் சஞ்சீவி பின் நிற்க மாட்டாது.

உதயனுக்கு உங்களிடமிருந்து கிடைத்த வரவேற்பைப் போலவே, சஞ்சீவிக்கும் வரும் என எதிர்பார்த்து உங்கள் ஆதரவை நாடி நிற்கிறோம்.

வாசகர்களின் விருப்பங்களை நிறைவு செய்யும் அதே வேளை, எமது இலட்சியத்தை எய்தவும் இறைவன் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

— ஆசிரியர்.



எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே.
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே.
தொல்லை வினைதரு தொல்லையகன்று சுடர்க தமிழ்நாடே!

— மகாகவி பாரதியார் —

### நேற்று மூன்றுவது நாளாக மறியல்

சுண்டுக்குளி, ஜன. 25

யாழ் நகரில் நேற்று மூன்றுவது நாளாகத் தொடர்ந்து மறியல் போராட்டம் நடந்தது.

யாழ் செயலகத்தின் முன்பாகவும் யாழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாகவும் நடைபெற்ற மறியலில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர்.

யாழ் செயலகத்திற்கு முன்பாக நடந்த மறியலில் அன்னையர் முன்னணியின் திருநெல்வேலிக் கிளையினர் பங்கு பற்றினர்.

பாடசாலை மாணவ மாணவியர் ஆசிரியர்கள், யாழ் மாநகர சபை சுகாதார ஊழியர் ஆகியோரும் மறியலில் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டக் கல்வித் திணைக்கள அலுவலகத்திற்கு முன்னால் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நேற்றும் மறியல் நடத்தப்பட்டது.

மறியல் போராட்டங்கள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற மாட்டா.

### ஹெலிக்கொப்டர் திருத்த பலாலி வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 25

வியாழக்கிழமை நடந்த மோதலில் சேதம் அடைந்த ஹெலிக்கொப்டரைத் திருத்துவதற்காக கொழும்பில் இருந்து மெக்கானிக்குகள் பலாலி வந்தனர்.

இதனிடையில் சேதம் அடைந்த அவ்ரோ விமானம், திருத்தப்பட்ட பின்னர் கொழும்பு திரும்பியது என்று சொல்லப்படுகிறது.

### மற்றும் ஒருவர் நேற்று மரணம்

நல்லூர், ஜன. 25

நேற்று முன்தினம் தெல்லிப்பளையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த வீரசுந்தரம் விஜயகுமார் (23 வயது) என்ற இளைஞர் நேற்று மரணமானார்.

SHABRA
நம்பிக்கையுடன்
சேமிக்க
நாணயமான நண்பன்
ஷப்ரு
உங்கள் முதலீடுகளுக்கு உயர்ந்த வட்டி பெற
SHABRA
Unico Finance Ltd.
207, Power House Road,
JAFFNA.
Phone: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சோதிட சஞ்சீவி

## நேற்று நிகழ்ந்த
## ★ வியாழ மாற்றம் ★

### உங்களுக்கு என்ன செய்யும்?

வியாழபகவான் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணி 21 நிமிஷத்துக்கு மகர ராசியிலிருந்து கும்ப ராசிக்குப் பிரவேசித்தார்.

இந்தமாற்றம் அவ்வளவு பெரிய மாற்றநிலையினை உருவாக்காது. இருப்பினும் சில பிரச்சினைகள் வர இடமுண்டு

ஈழநாட்டின் அரசியல் ரீதியில் பொருளாதாரம் சீர்குலையும்.

அன்றாட வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, நிதி ற்றாக்குறை - இசனுல் மக்கள் விழிப்படைவர். அதன் பிரதிபலனாக அரசை எதிர்ப்பர். ஆண்டு நடுப்பகுதியில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் நிகழும்.

தொழிலகங்களில் தொழிலாளர்கள் பிரச்சினை பெரிய தலையிடியாகத் தலை தூக்கும். இலங்கை அரசுபணத்தை வீண் விரயமாக்கும். ஆனல் தாகய விருத்தி உண்டு. எனினும் நோய் தொற்றுகளினல் பயிரழிவு அதிகரிக்கும்.

இவ்வியாழ மாற்றத்தால் டருவ மழையும் நல்ல சுபீட்ச காலநிலையும் ஈழத்துக்குச் சாதகமாக அமையப்போகிறது. பொதுவாக, பிரதான பிரச்சினை தீர்வுக்கு வரும். ஆயின், அது தீர வேறு பிரச்சினை தலை தூக்கும்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை அபிவிருத்தி குன்றும். தென்னை நன்கு வளர்ந்து பயன் கொடுக்கும். இதுதவிர பொன், இயந்திர தயாரிப்புகள் விருத்தியடையும்.

எல்லாவற்றுக்கும் மேலான இலங்கையின் முக்கியமான அரசாங்க உயர்பதவிகளுக்கும் கடுமையான போட்டிவரும். இதன் விளைவாக அரசத் தலைவர் மீது அதிக வெறுப்பு உண்டாகும்

இவற்றின் விளைவாக இலங்கையில் புதிதாகப் பல்வேறு கிளைஸ்தாபனங்கள் உருவாகும்.

#### பன்னிரு ராசிகளின் பலன்

**மேடம்**

இந்த ராசிக்காரர்களுக்குப் பொதுவாக நல்ல பலன் கிடைக்கும், தொழில் விருத்தியும் காரியசித்தியும் கைகூடும். வாழ்க்கையில் சுபீட்சம் உண்டாகும். வியாபாரிகளானல் நல்லலாபம் கிட்டும் கல்வி கற்கும் மாணவர் நன்மை பெறுவர். கன்னிப் பெண்களுக்கு கல்யாணம் நிகழும். தொழில் அற்றவர்களுக்குத் தொழில் வாய்ப்பும் கிட்டும். விவசாயம் நல்ல விருத்திபெறும். இவர்களுக்கு வரவிலும் செலவு குறைவாகவே இருக்கும். தெய்வ வணக்கம் நன்மை பயக்கும்.

**இடபம்**

இந்த ராசியினருக்கு வியாழமாற்றம் பலவருவாயைக் கொடுக்கும். முற்றுமுழுதாக நன்மையையே அனுபவிக்கப் போகின்றார்கள். நகை வியாபாரிகளாயின் நன்மை பல உண்டு. தொழிலின்றி இருப்போர் கலைத் துறையில் ஈடுபட்டால் நல்ல பலனுண்டு. பெண்கள் நல்ல பதவி வாய்ப்பைப் பெறுவர். பொதுவாக நல்ல பலன்.

**மிதுனம்**

எதிர்காலத்தில் என்ன வருமோ என்ற பயப் பிராந்தி இந்த ராசிக் காரர்களுக்கு வரும். ஆனல் இடமாற்றம், பொன், நெல், தானிய வகை இவற்றால் புகழ், சிறப்பு, இலட்சுமீகரம், சுகம், இனபந்துக்கள் கொண்டாட்டம், மங்கலகாரியங்கள் என்பவற்றால் நன்மை உண்டு. கன்னியருக்கு விவாகப் பேச்சு நிகழும், வியாபாரிகளாயின் புதிய முதலீட்டைத் தவிர்க்கவும் நண்டர்கள் உதவி கிட்டும். தர்மச் செலவு ஏற்படும்.

**கடகம்**

செய்தொழிலில் மந்த நிலைமை காணப்படும். இந்த ராசிக்காரர்களுக்கு ஏமாற்றம், வாக்குக் கலகம், யோசனை மிகுதி செலவுகளை மட்டுப் படுத்தமுடியாமை, நண்பர்களால் நன்மை எனை பன வரும். தெய்வ வழிபாட்டினல் துன்பம் குறையும். வியாபாரிகளாயின் ஆதாயம் கிட்டும். பெரிய முதலீடுகளைத் தவிர்க்கவும் கன்னியருக்குக் கலியாணப் பேச்சுக்கால் துவங்கும். மாணவர்களாயின் ஆசிரியர்களால் கஷ்டமுறுவர். கல்விச்செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்**

இந்த ராசிக்காரர்களுக்கு எடுத்த காரியங்கள் சித்திக்கும். வாழ்வில் எல்லாச் சுகமும் கிடைக்கும். கன்னியருக்கு விவாகம் நடக்கும். வியாபாரிகள் லாபமீட்டுவர். மாணவர்களாயின் கல்விச் சிறப்பு உண்டு. கணவன் மனைவி உறவு சமம். வருடத்தின் நடுப்பகுதி நன்மை பயக்கும். புண்ணிய கைங்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

# அகிலமே அன்பென்று கொட்டுமுரசே!

## எல்லோரும் இன்புற்றிருக்க இனியதோர் நெறி

அன்று வியாழக்கிழமை. என் தாயகமாகிய ஸ்கொத்லாந்தின் தலைநகராம் எடின்பரோவிலிருந்து வடகீழ்க் கரையிலுள்ள அபர்டீனுக்குப் போய்க்கொண்டிருந்தேன் வடக்கே போகப் போக காலநிலை நனருயிருந்தது ஆனல் வயல்கள் வெண்டுகிலை போர்த்திருந்தன. நாட்டுப் புறத்தைப் பனி மூடியிருந்தது. இருட்டத் தொடங்கவே உலகம் கறுப்பும் வெளுப்பும் சாம்பலுமாய் மாறலாயிற்று. பனிப்புயலில் இருபது மைல் பயணம் செய்வதென்றால்? பின்னிரவிலும், தொடரும் அகிலாலையிலும் பயணம் செய்யும் என்னைத் தவிர அந்த அமைதியைக் குலைக்க அங்கு எதுவுமில்லை!

உயிரற்ற உலகம், ஈயத்தை உருக்கிவார்த்த வானம். அதைததொட, கிளைகளாகிய என் பு விரல்களை நீட்டும் மரங்கள்.

கிழக்கே கடல் சாம்பல் நிறமாய் விரிந்தது. சந்திரன் அசற்று வெள்ளி மூலாம் பூசிகொண்டிருந்தான். கரையிலிருந்து பன்னிரண்டு மைலுக்கப்பாலிருந்த கலங்கரை விளக்கம் அதைப் பொன்னக்கி ரஸவாதம் செய்து கொண்டிருந்தது.

வண்ணப்படங்கள் வருமுன் இருந்த கறுப்பு-வெள்ளைப் படங்கள் போன்று, உயிரற்ற நிழல்கள் உலகை மூடும்காட்சி, நாடுகளுக்கிடையில், மதங்களுக்கிடையில், ஏழை - பணக்காரனுக்கிடையில், கிழக்கு மேற்குக்கிடையில், யூதனுக்கும் அராபியனுக்குமிடையில், வடக்கு-தெற்குக்கிடயில் நிலவும் பிணக்குகளாய், உலகை மூடும் நிழல்கள் போல!

உலக மக்களின் - நாடுகளின் - எதிர்காலப் பற்றி நாம் சாணும் உற்பாதங்களாகிய போர், புரட்சி, பேரழிவு, பசி, கொடுங்கோலமை, சித்திரவதை, மனிதாபிமான வட்ரசி என்பவற்றால் ஏற்படும் அச்சம் போல, முடிவில்லாததொரு கருமை கடலின் வண்ணத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது.

காரிருள் பற்றி, அணுவாயுத மேகங்கள், சாக்காடு, சர்வசங்காரம் பற்றியெல்லாம் என் பிள்ளைகள் பேசுகிறார்கள். கோடானுகோடி பேர் உணவுக்கும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கும் வகையில்லாது இருக்கையில், உலகின் வளங்களும் செல்வமும் போர்க்கருவிகளை உற்பத்தி செய்யப் பயன்படுவது பற்றி என் பிள்ளைகள் கவலைப்படுகிறார்கள். அரசியல்வாதிகள தம் முயற்சிகள் சமாதான நோக்கமுடையவை என்று சாதிக்கிறார்கள்!

சமாதானத்துக்கு அத்திவாரம் பயம் அல்ல; அன்பு. பேராசை அல்ல; விழுங்கி விட்ட போதும், ஆழ நிலத்தில் - தாக்குப்பிடிக்க முடியாத சூழ்நிலையிலும் - உயிர் முகிழ்க்கிறது; தொடரும் கோடைக்குரிய பயிர்களின் வித்துக்கள் வளர்கின்றன. வற்றிய மரங்களும் மொட்டுக்களைச் சூடுகின்றன; வசந்தத்துக்குக் கட்டியங் கூறுகின்றன!

நம் முலமின் இருண்ட நீ ஒ. நம்பிக்கை - மற்றைய மக்கள் மீது நம்பிக்கை - நம் மீது நம்பிக்கை - நம்மைப் படைத்த ஒருவன் மீது கடவுள் மீது - நம்பிக்கை!

"ஒளியிழந்த இற்றைப் பொழுதில் அன்பின் நம்பிக்கை எங்ஙனம் முகிழ்க்கும்?" என் பிள்ளைகள் என்னைக் கேட்கிறார்கள்!

ஒவ்வொரு கருக்கலையும் இருள் கவ்வுவது போல, அஸ்தமனத்தைத் தொடரும் வைகறை போல, ஏனைய நிறங்களை உறைபனியின் வெண்மை

> 1984 ஆம் ஆண்டில் ஒருநாள், பி.பி.ஸி உலக சேவையில் Reflections என்ற தொடர். நிகழ்ச்சியில் ஒரு 'நற்சிந்தனை' கேட்டேன். பேசியவர் வண. டக்ளஸ் அய்ற்கென்; ஸ்கொத லாந்தைச் சேர்ந்தவர்; கிறிஸ்தவ மத போதகர்
>
> அந்தச் சமயத்தில் ஸ்கொத்லாந்தில் பனிப் புயல் வீசிக் கொண்டிருந்தது; உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருந்தது. அதைத் தோற்றுவாயாகக் கொண்டு ஓர் அற்புதமான உருவகம் செய்தார் உள்ளடக்கம் நமக்கு எட்டாத வரட்டுத் தத்துவமாயில்லாமல், யதார்த்தமாக — உலகப் பொதுமையை நாடி — ஓங்கியது
>
> அவர் பேசிய ஆங்கிலம் கவிப்பெருக்கு! நாலு நிமிஷந்தான்; கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன்.
>
> பேச்சை ஒலிப்பதிவு செய்து, படியெடுத்து, மொழி பெயர்த்து தமிழுலகுக்குத் தருகிறேன்
>
> — சோ. பத்மநாதன்

விதானத்தின் கீழ், இது போன்ற நம்பிக்கை பிறக்கிறது. கடைசியில் - ஒருவழியாக - மக்கள் சமாதானத்துக்காக உழைக்க, நீதியின் மீது நாட்டங்கொள்ளத் தொடங்கியுள்ளனர்!

தம்மைப் பின்பற்றியவர்களை நோக்கி ஏசு பெருமான் கட்டளையிட்டார். "ஒருவர் மீது ஒருவர் அன்பு செய்யுங்கள்!" இவ்வளவே! அன்பின்மீது உங்கள் உறவுகளைக் கட்டியெழுப்புங்கள்; புதியதோர் உலகம் எழும்! எத்துணை எளிய வழி! சிக்கல் நிறைந்த இன்றைய உலகில் இது சிறுபிள்ளைத் தனமாகப் படலாம்.

டாம் பட்சமே; அவை கடவுள் மீது நாம் வைக்கும் பக்திக்குப்பின் வைக்கத் தக்கவ என்றே உணர்ந்தேன்.

இத்தகைய அனுபவங்கள் வாய்த்த பிறகு, அரசியல் அமைப்புக்களால் வேறுபட்ட போதும், ரஷ்யர்கள் என் பகைவர்கள் அல்லர் — போக்லாந்து மல்வீனுக்கள் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டவர்களாயிருந்தாலும், ஆர்ஜென்டீனியர்கள் என் பகைவர்கள் அல்லர் என்றெல்லாம் உணர்கிறேன்.

தொலைதேசத்து கறுப்பர்களும், மாநிறத்தவர்களும் என் குடும்பம்

**சோ. பத்மநாதன்**
ஆங்கில விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி

ஆனல், ஒரு ரஷ்ய மதபோதகர் நடத்திய ஆராதனையில் கலந்து கொண்ட பிறகு ஓர் ஆர்ஜென்டீனிய தத்துவப் பேராசிரியரோடு அனைவருக்கும் பொதுவான ஆண்டவன் பற்றி உரையாடிய பிறகு, கன்னங் கரேலென்ற குருவானவர் ஒருவரோடு உரையாடியபடி உலாவிய பிறகு, லெபனனைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ அராபியனும், லீபியப் பெண்ணொருத்தியும், பசிபிக் கரையோரத்து ஆண் - பெண்களும் சொன்னதைக் கேட்ட பிறகு எங்கள் வேறுபாடுகள் எல்லாம் — அவை சமூக வேறுபாடு என்ன, கலாசார வேறுபாடுகளானல் என்ன, அரசியல் வேறுபாடுளானல் என்ன — அவை எல்லாம் இரண்

என்றும், நாமெல்லோரும் — நீங்களும் நானும் ஒப்பற்றவனகிய ஆண்டவனுடைய படைப்பு என்றும் உணர்கிறேன்.

ஆனல் எனக்கு இன்னென்றும் புரிகிறது; உலகின் எதிர்காலத்தை பலவீனங்கள் நிறைந்த நம்போன்ற மனிதர்கள் கையில் விட்டால், அன்பு மேலோங்காது; குளிர் பனியின் கொடுமை குறையாது.

கடவுளோடு தான் வசந்தம்;வரும்;கதகதப்பு நிறைந்த கோடை தொடரும். கடவுளுக்கு அந்த சந்தர்ப்பத்தைக் கொடுக்காது விடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை; கொடுக்கத்தவறுவோமானல் நமக்கு மீட்சியே இல்லை!

# வடமராட்சியின் வளம் பெருக வழிகள் பல உண்டு

## மூல வளங்களைப் பயன்படுத்தி தொழில் துறைகளை ஆரம்பிக்கலாம்

இலங்கையின் தலையாய் அமைந்துள்ளது வடமாகாணம் என்றும், வடமாகாணத்தின் மூளை எனக் கருதப்படுவது வடமராட்சி என்றும் வேடிக்கையாக விவரிப்பது ஒரு வழக்கம்.

இலங்கையின் புவியியல் தோற்றத்தினல் மட்டுமன்றி, விவேகிகள், கல்விமான்கள் பலரைத் தந்துள்ளமையினலும் வடமராட்சி பற்றிய இக்கூற்று சாலப்பொருத்தமானது எனலாம்.

வடமராட்சி யாழ்குடா நாட்டுக்குள் ஒரு குடா நாடாகக் காட்சி தருகிறது. இது தொண்டைமானாற்றினல் முள்ளிப்பத்து வரை யாழ்குடாவின் ஏனைய பகுதிகளில் இருந்து நீரினல் பிரிக்கப்பட்டுள்ளது. இப்




பகுதி 72 சதுர மைல் பரப்பினை உடையது. இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில், வடமராட்சி மூலவளங்களில் வரட்சியுடையது. இதுவே இங்கு மூளைசாலிகளின் விருத்திக்கு வித்திட்டது என்று சிலர் கூறுவர்.

வடமராட்சியின் மூலவளநிலை அப்பகுதிக் காலநிலையைப் போன்றே வரண்டதாகக் காணப்பட்டது உண்மையே.

கூடுதலாக அரசாங்க ஊழியரையே இப்பகுதி தொடர்ந்து உற்பத்தி செய்து வந்தது. இப்பகுதியின் பொருளாதாரம் அவர்களின் வருவாயிலேயே தங்கியிருந்ததால் அங்கு மூலவளங்கள் பற்றிய உண்மைநிலை அறியப்படுவதற்கான வாய்ப்பும் நிர்ப்பந்தமும் இது வரை ஏற்படாமல் போயிற்று.

தொண்டைமானாறு உவர்நிலத்தை நன்னீராக்கும் திட்டம், வல்லிபுரக்கோயில் பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலை அமைத்தல் முதலிய ஒரு சில முயற்சிகளும் நிர்ப்பந்தமின்மை காரணமாகவோ, அரசியல்புறக்கணிப்பாலோ, உரியவர்களின பாராமுகத்தினலோ கைவிடப் பட்டுள்ளன.

அரசியல் ரீதியிலும் இனரீதியிலும் நமது மக்கள் கொடுந்துன்பத்தை எதிர்நோக்கும் இந்த வேளையிலும் இனிவரப் போகும் காலத்திலும் அரசசேவையை நம்பியிருக்கும் துர்ப்பாக்கியநிலை முற்றாக மாறவேண்டும்.

எமது பகுதியின் மூல வளங்களை அறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த மூலவளங்களைப் பயன்படுத்தி செயற்படுத்தக்கூடிய தொழிற்கல்வியைப் பயிற்சி நெறிகள் மூலம் அளிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

அறிவின் படுகுழியில் உந்தப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் செய்ய வேண்டிய அதிவிரைவான, அதி அத்தியாவசியமான, ஆக்கபூர்வமான பணி இதுவென்பது திண்ணம்.

காலத்திற்குக் காலம் வந்த அரசாங்கங்களின் குறுகிய இனரீதியான அரசியல் நோக்கங்களாலும், குறைந்த வேலை வாய்ப்பு, சனப்பெருக்கம் போன்ற காரணங்களாலும் இலங்கையின் சிறுபான்மை இனத்தவராகிய தமிழரிடையே தொழில் வாய்ப்புகள் குறைந்துவிட்டன.

தமிழர் மத்தியிலும் குறிப்பாக வடமாகாணத் தமிழரிடையே வேலைவாய்ப்புக்கான போட்டி வலுவடைந்து உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் வடமாகாணத்தின் இளைய தலைமுறையினரின் எதிர்கால முன்னேற்றம், தொழிலவாய்ப்பு என்பவை சிறப்பாக அமைய வேண்டின் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தலும், அதற்கான மூலவளங்களை ஆழ்ந்து ஆய்ந்து சொள்ளலும் அவசியமானதாகும்.

வடமராட்சியின் குடித்தொகை மட்டுமன்றிக் குடி அடர்த்தியும் அதிகரித்து வருகின்றமை இ பகுதி மூலவளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சியின் குடித்தொகை ஆனது-

1971 இல் - 1,04,899 பேர் ஆகும். இதில் ஆண் 50,855, பெண் 54,044 ஆகும்.

1981 இல் - 1,12,499 பேர் ஆகும், இதில் ஆண் 55,118 பெண் 57,381 ஆகும்.

கம் மூலமே இது சாத்தியமாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேசிய வருமான பங்கீட்டில் 35 வீத பங்கினைக் கைத்தொழில்கள் பெறுகின்றன. ஆனல் எமது நாட்டிலோ கைத்தொழில்கள் 20 வீத பங்கினையே வகிக்கின்றன. இந்நிலைமையை மாற்றிக் கைத்தொழிலில் நாமும் அதிக பங்கினை வகிக்க வேண்டும்.

வடமராட்சியின் இயற்கை மூலவளங்கள் பல அறியப்படவில்லை; அறியப்பட்ட சில வளங்கள் கூடச் சரியான முறையில் பயன் படுத்த படவில்லை. இதனல் அப்பகுதி மக்கள் தமதுபொருளாதார முன்னேற்றம்கருதி பலவாறக குடிபெயர்ந்துள்ளனர்.

அரசாங்க வேலைவாய்ப்புக்காகவும் வியாபார நோக்கத்திற்காகவும் ஒரு பகுதியினர் கண்டி, மட்டக்களப்பு, கேகாலை, திருகோணமலை போன்ற பகுதிகளை நாடியுள்ளனர் மற்றொரு பகுதியினர் கொழும்பை தமது நிரந்

**--சி. அம்பிகாவரன்--**

வடமராட்சி பகுதியின் சிறிய நிலப்பரப்புடன் ஒப்பிடும் போது, இக்குடித்தொகை மிகவும் அதிகமானதாகும்.

யாழ்ப்பண மக்களின் வேலைவாய்ப்பு நிலைமைகளை நோக்கும் போது ஆண்களின் 58 6 வீதத்தினர் மட்டுமே பொருளாதார ரீதியாக முயற்சியுடையவர்களாவர். பெண்களைப் பொறுத்த வரைஇது 19.2வீதம் மட்டுமே

மேலும் மொத்தமாக வேலை புரிவோரில் 40.6 வீதமானேர் விவசாய துறையிலேயே தங்கியுள்ளார்கள்.மிகுதி 18வீதமானேர் மட்டுமே ஏனைய துறைகளில் வேலைபுரிகின்றனர்.

இந்நிலைமை மாறி எதிர்கால சமூக பொருளாதார நிலையை விருத்தி செய்ய வேண்டுமாயின் அதற்கு உள்ளூர் மூலவளங்களிலிருந்து உச்சபயனை பெறுவது அவசியமாகிறது.

இதற்குமக்களின் வேலைவாய்ப்பை பெருக்கி, வருமானத்தைகூட்டி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

இப்பிரதேசத்தின் கைத்தொழில் மயமாக்

தர வசிப்பிடமாக மாற்றிகொண்டுள்ளார்கள்.

வேறு ஒரு பகுதியினர் விவசாயம்செய்யும்நோக்குடன் உடுப்பிட்டி, புலோலி, கட்டைவேலி முதலியவிவசாயகுடியேற்றங்களை நோக்கிப் படையெடுத்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை முதலிய கரையோரப் பகுதிகளிலிருந்தும் பிறிதொரு பகுதியினர் கடற்றெழில் முயற்சிக்காக முல்லைத்தீவு,திருகோணமலைபகுதிகளுக்கு சென்றிருக்கிறார்கள்.

வேறுமொரு பகுதியினர் குறிப்பாக இளைஞர்கள் தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடுகளுக்கு பெயர்ந்துள்ளனர்.

இக்குடியகல்வு நடவடிக்கை தொடர்ந்தும் இடம் பெறுமானல், அப்பகுதிமக்களின் எதிர்கால சமூகபொருளாதார முன்னேற்றம் நிச்சயமாகத் தடைப்படும்.

இப்பகுதியில் பெருகிவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பளித்து, மக்களின்வாழ்க்கைதரத்தை உயர்தத வேண்டுமாயின் உள்ளூர் மூலவளங்களின்

(7ஆம் பக்கம் பார்க்க)

## ★ தென்னைச் செய்கை

# வளமான கன்றுகளைப் பெற வாய்ப்பான வழிகள்

தென்னைச் செய்கைக்கு முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது நல்ல நாற்றுக்களைத் தெரிந்தெடுத்தலாகும்.

நல்ல நாற்றுக்களைப் பெறுவதற்கான வழிவகைகளைப் பற்றி, வணிமகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தென்னை அபிவிருத்திச் செய்கை தொடர்பான கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது.

தெங்கு அபிவிருத்திச் சபையின் வடபகுதி பிராந்திய உத்தியோகத்தர் திரு. எஸ். திருக்தணிகாசலம் இதுபற்றி விளக்கமளித்தார்.

தென்னை நாற்று மேடைகளை அமைத்து நல்ல தென்னங் கன்றுகளைப் பெறுவதற்கு அவர் கூறிய ஆலோசனைகள்:-

எப்போதும் 15வருடங்களுக்கு மேற்பட்ட— செழித்து வளர்ந்த— நோயற்ற தென்னைகளில் இருந்து நாற்றுகளுக்கு தேவையான தேங்காய்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

நன்கு முற்றியதும், சுமார் ஒன்றரை இருத்தலுக்கு மேல் நிறையுள்ளதுமான தேங்காய்களை தேர்ந்தெடுப்பது நல்லது.

அடிமரம் மொத்தமாகவும், ஓலைமட்டைகள் ஐதாக பருத்தும், ஓலைகள் நீண்டதாகவும் உள்ள மரங்களிலிருந்து தேஙகாய்களை நாற்றுக்குத் தெரியக் கூடாது.

குலைகளில் ஆசப் பருத்துக் காணப்படும் தேங்காய்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்

ஆடிபாதத்தில் விழுந்த காய்களை அகற்றி அவற்றை கொப்பருவிற்கு பயன்படுத்தலாம்.

நாற்றிடும் தேங்காய்களின் தொகையில் மூன்றில் இரண்டு பங்குதான் நல்ல நாற்றுகளைத் தரக் கூடியதாக இருக்கும்.

திற்கு அடுக்கி மண் இட்டு மூட வேண்டும். இது தென்னைக்கு நல்ல பயனைக் கொடுக்கும்.

புதிதாக தென்னங்கன்றுகளை நடுவதற்கு அரசாங்கம் ஏக்கர் ஒன்றிற்கு ஆயிரம் ரூபா மானியம் வழங்குகிறது இதை நல்ல முறையில் பயன் படுத்தவேண்டும்.

**நிலமும் புலமும்**

தேங்காயும், நன்கு நீரில் ஊறவைக்கப்பட்ட தேங்காய்களும்தான் நன்கு முளைக்கும் என்பது நம்ம வர் மத்தியில் நிலவும் ஐதீகம்

ஆனல் தற்போதைய ஆய்வுகளின்படி நன்கு முற்றிய தேங்காய்களை மரத்திலிருந்து பறித்த மாத்திரத்திலேயே அவற்றை நாற்றிட முடியும் என்பதும்—

அவை நல்ல பயனைக் கொடுக்கும் என்பதும் அறியப்பட்டிருக்கிறது.

நாற்று மேடையில், முகிழ் பக்கம் ஒன்றன் பின் ஒன்ருக பக்கப்பாட்டில்— அகலமான பக்கம் நிலத்தில் படியக் கூடியதாக— தேங்காய்களை நட வேண்டும் நிரைக்கு 100 தொடக்கம் 150 தேங்காய் வீதம் நீர் பாய்ச்சக் கூடிய வகையில் பாத்திகளை (சால்களை) அமைத்தல் வேண்டும்.

நான்கு ஐந்து மாதங்களில் முளைக்காத தேங்

இவற்றைஏழு தொடக்கம் ஒன்பது மாதம் வரையுள்ள காலத்தில் மேடையிலிருந்து பிடுங்கி நாட்டலாம்.

கன்றுகளை நாட்டும் இடங்களிலேயே நாற்றுக்களை உருவாக்குவது உகந்ததல்ல.

நாற்று மேடையில் தோற்றுவித்தகன்றுகளைப் பிடுங்கி உரிய இடத்தில் நடுவதே நல்ல பயனைப் பெறவாய்ப்பளிக்கும்.

வளர்ந்த தென்னைகளுக்கு ஒன்று விட்ட இடைவெளிகளில் 8அடி நீளம், 4அடி அகலம், 2 அடி ஆழத்தில் குழிகளைப் பறிக்க வேண்டும். அவற்றில் தேங்காய் மட்டைகளை நிலமட்டத்திலிருந்து சுமார்அரை அடிஉயரத்

**தொகுப்பு: பொ. நவரத்தினம்**

> **வாசகர் கவனத்திற்கு...**
>
> தமிழ் பிரதேசங்களான எமது தாயகத்தை விவசாயம், கைத்தொழில், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டுவதே இந்தப்பகுதியின்நோக்கமாகும்.
>
> மேற்கண்ட விடயங்களில் ஆய்வுரீதியான கட்டுரைகளும் நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளும் விரும்பி வரவேற்கப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உண்மையை ஏற்று ஒப்புக்கொள்ளுதல்

# மனிதனுக்கு உயர்வு தரும் பண்பு

## குற்றத்தை ஏற்பதால் மன்னிப்புக் கிடைக்கும்

இறைவன் ஒருவன் தான் குற்றமில்லாத குணக்குன்று. மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவரும் ஏதாவது ஒரு சிறிதாவது குற்றம் உடையவர்களாம். செம்பு கலவாத அணிகலமே இல்லை. அதுபோல் குற்றமில்லாத மனிதர்கள் இல்லை.

திருஞான சம்பந்தர், காந்தி அடிகள் போன்ற மகான்களிடத்திலும் ஒரு சிறிது குற்றம் உண்டு. ஆனால் குற்றம் புரிந்தவர்கள் ஆண்டவனிடத்திலும், ஆன்றோர்களிடத்திலும் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொண்டால் நம் குற்றங்களை இறைவன் மன்னிப்பான் 'புரிபிழைபொறுக்கும் சாமி' என்கிறார் அருணகிரிநாதர்.

பட்டினத்துச் சுவாமிகள் பிழை பொறுக்குமாறு ஆண்டவனை வேண்டுகின்ற முறையில் ஒரு தமிழ்ப்பாடல் பாடியிருக்கிறார். ஆனால் அவர் பிழை செய்யாதவர்.

'இந்த ஊனெடுத்த பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை' என்று அவரே கூறுகின்றார்.

''கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி, நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச் சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும், எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.' இதனை அபராத க்ஷமை என்று கூறுவர்.

குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதால் மன்னிப்புக் கிடைக்கும் என்ற நியதியை அடியிற் கண்ட வரலாறு விளக்கும்.

ஒரு சிறைச்சாலையில் பல குற்றவாளிகள் இருந்தார்கள். அந்நாட்டை ஆளுகின்ற அரசர் பெருமான் மாறுவேடம் பூண்டு அந்தச் சிறைச்சாலையைப் பார்வையிட வந்தார்.

சிறை அதிகாரிக்கு மட்டும் அவர் மன்னர் என்று தெரியும். சிறை அதிகாரியுடன் மன்னர் சிறைச்சாலைக்குள் சென்று பார்வையிட்டார் ஒரு கைதியைப் பார்த்து, 'உன் பேர் - என்ன? நீ ஏன் சிறைக்கு வந்தாய்?' என்றார்.

'ஐயா! என் பெயர் குப்புசாமி. நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நீதிபதிக்குப் பல வீடுகள் இருந்தன. நான் அவருடைய வீட்டில் குடியிருக்கிறேன். என்னைக் காலி பண்ணச் சொன்னார். வாடகைக் கட்டுப்பாட்டின்படி நான் காலி பண்ண முடியாது என்றேன் நீதிபதி என்மேல் ஒரு குற்றத்தைக் கற்பித்து, இந்தச் சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டார்.' என்றான் அந்தக் கைதி.

மற்றொரு கைதியைப் பார்த்து ''உன் பெயர் யாது? நீ என்ன குற்றம் செய்து இங்குவந்தாய்?'' என்று கேட்டார்.

''ஐயனே! என் பெயர் ராமமூர்த்தி. நான் நிரபராதி. காவல் துறை அதிகாரி என்னிடம் கடனாகப் பணம் கேட்டார். நான் தர மறுத்தேன். பக்கத்து வீட்டு ஜன்னல் வழியே நான்கு சாராயப் புட்டிகளை விட்டு நான் சாராயம் காய்ச்சி விற்பதாகக் குற்றம் சாட்டி என்னை இங்கு அனுப்பி விட்டார்கள்'' என்றான் அவன்.

''நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?'' என்று மூன்றாவது கைதியைக் கேட்டார் மன்னர்.

''புண்ணியவானே! என் பெயர் புருஷோத்தமன், என் அடுத்த வீட்டில் தாசில்தார் குடியிருந்



தார். அவருடைய மனைவிக்கும் என் மனைவிக்கும் மனத்தாங்கல். இருவருமே சண்டை போட்டுக் கொண்டார்கள். ஆற்றங்கரையில் ஓர் அநாதைப் பிணம் கிடந்தது. பனைவிக்கு அடிமையான தாசில்தார், சலவைத் தொழிலாளி வீட்டில் நான் சலவைக்குக் கொடுத்திருந்த துணியை வாங்கிக் கொண்டு போய் அப் பிணத்தின் வாயில் அடைத்து துப்பறிபவரைக் கொண்டு அத்துணி என் துணி என்றும் அக்கொலை நான் தான் செய்தேன் என்றும் நிருபித்து என்னை அநியாயமாகத் தண்டிக்குமாறு செய்தார் அரசாங்கம் செய்த அநியாயத்தால் இங்கு வந்து அல்லற் படுகிறேன்'' என்றான் அவன்.

''நீ யார்? உனக்கு ஏன் தண்டனை கிடைத்தது?'' என்றுஅடுத்த கைதியைக் கேட்டார் மன்னர்.

''ஐயா, என் பெயர் வேங்கடாசலம். ஒரு வழக்கறிஞர் மகன் என் மகனுடன் நட்புகொண்டான. 'தீயவனோடு நீ நட்புக் கொள்ளாதே' என்று என் மகனைக் கண்டித்தேன். இதனால் என்னிடம் பகைமை கொண்ட வக்கீல் ஐயா, என் மீது திருட்டுக் குற்றத்தைச் சாட்டி உத்தமனாகிய என்னை அக்கிரமமாகத் தண்டிக்குமாறு செய்துவிட்டார். நான் சிறிதும் குற்றம் செய்தேனில்லை''.

இப்படியே எல்லாக் கைதிகளும் கூறினார்கள். முடிவில் ஒரு கைதியைப் பார்த்து, ''அப்பா! உன் பெயர் என்ன? நீ ஏன் சிறைச்சாலைக்கு வந்தாய்?'' என்று மன்னர் வினவினார்.

''ஐயா! என் பெயர் குமாரசுவாமி. நான் பரம ஏழை. என் மனைவி சிக்கனம் இல்லாதவள்; வரவுக்கு மேல் செலவழிப்பவள். எனக்கு ஆறு பெண் குழந்தைகள். ஐந்து ஆண்குழந்தைகள். இப்பொழுது என் மனைவி ஆறு மாதம் கர்ப்பம். தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள். தங்கை விதவையாகி வீட்டில் இருக்கிறாள். அத்தையாகிய ஒரு கிழவியும் இருக்கிறாள். பெரிய குடும்பம். சிறிய வருவாய். அரை வயிற்றுக்கும் உணவு கிடைக்கவில்லை. களவு என்பதைக் கனவிலும் கருதக் கூடாது வறுமையிலும் செம்மையாக இருக்க வேண்டும். பட்டினிக் கொடுமையால் நான் மதிகெட்டு எங்கள் ஊர்ப் பெருநிலக்கிழார் ஒருவருடைய வயலில் அறுவடை செய்து குவித்திருந்த நெற் களஞ்சியத்தில் நெல் திருடிவிட்டேன். அவ்வாறு திருடியது பெருந்தவறு. அதனால் குற்றம் செய்த என்னை அரசு தண்டித்தது. நான் செய்த பிழையால் இங்கு வந்தேன் விளக்கெண்ணெய் குடித்தால் பேதி ஆகும். மாம்பழம் அதிகம் தின்றால் வயிற்று வலி வரும். குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவார். செய்த குற்றத்துக்காகத் தண்டனையை அனுபவிக்கிறேன்''என்று கண்ணீர் வடித்துக் கொண்டே கூறினன்.

இதனைக் கேட்ட மன்னர் மனம் உருகினார்.

மன்னர் சிறை அதிகாரியைப் பார்த்து மிகுந்த கோபக் குறியைக் காட்டி உரத்த குரலில் கூறுகின்றார்:

''சிறை அதிகாரியே! இச்சிறையிலுள்ள இத்தனை பேர்களும் பரம யோக்கியர்கள். குற்றம் செய்யாதவர்கள். குணசீலர்கள். இவன் மட்டுமே குற்றம் செய்தவன். யோக்கியர்களுக்கு நடுவே ஒரு அயோக்கியன் இருக்கக் கூடாது.

''அடேய்! குமாரசாமி! நீ களவாணிப் பயல். இங்குள்ள அத்தனை பேரும் மிக்க உத்தமர்கள் திருட்டுப்பயலாகிய நீ இந்த உத்தமர்களுடன் இருப்பது பிழை. ஆதலால் இப்போதே நீ வெளியே போ! சீக்கிரம் போய் விடு. சிறை அதிகாரியே, இவனை வெளியே அனுப்பி விடும்'' என்று சாதுர்யமாகக் கூறிச் சென்றார்.

சிறை அதிகாரி, குமாரசுவாமியைச் சிறையிலிருந்து வெளியே அனுப்பி விட்டார். குற்றத்தை ஒப்புக் கொண்டவனுக்கு மன்னிப்பும் விடுதலையும் கிடைத்தன.

ஆதலால் நாம் இறைவனிடம் நமது குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிக்குமாறு வேண்டுதல் புரிய வேண்டும். அதனால் நமக்கு ஆன்ம விடுதலை கிடைக்கும்.

திருமுருக கிருபானந்தவாரியார்

## சத்தம் எல்லாம் சங்கீதமாமோ?

இன்னிசை கேட்டால் இன்பம் விளையும்
பத்தும் துரத்தும் பசிதான் வரினும்
சோர்வினை நீக்கும் ஔடத மின்னிசை
உடலின் உபாதையும உள்ளத்து உளைச்சலும்
தணிச்குந் தன்மை இன்னிசைக் குண்டு
பயிரினம் முதலாம் உயிர்னம் யாவும்
பண்ணின் இசையிற் பாங்குடன் வளரும்
பண்படும் இசையின் பவித்திரம் அதனில்
புண்படும் இதயம் புனிதம் அடையும்
இசையினல் இறைவனை ஈர்த்தனன் இராவணன்
கதையாய் இருப்பினும் கருத்ததில் உண்டு
இன்தமிழ் வளர்த்தார் இசையின் துணையொடு
கதையுஞ் சொல்வார் கந்தர்வ இசையுடன்

தூங்காக் குழவியைத் தூங்க வைத்திடும்
தொலியொன்று உண்டெனின் இன்னிசைத்
தொனியே
இசையின் இரசமும் இனிமையும் உணர்கலார்
கொலைஞரில் கொடியோர் கொடுஞ் சூழ்ச்சியாளர்
நன்றன்று அவர்மேல் நம்பிக்கை வைத்தல்
ஆங்கில நாட்டின் அருங்கவி ஷேக்ஸ்பியர்
அறிவுரை இதனை அறிந்திடல் நன்று
அர்த்தம் உள்ள அனுபூதி ஈது

இன்னிசை விடுத்து இரற்றொலி இயம்பும்
இரலல் இசையே இனியும் எதற்கு?
சினிமா இசையெலாம் சீர் இசையாமோ?
கர்த்தப ஒலியிற் காயகன் பாடினல்
நித்திரை கெட்டிடும் நிம்மதி நீங்கும்
கண் அயர்ந்திடுமோ களைத்த குழவியும்
துந்துபி தும்புரு பேரிகை பேரியாழ்
அக்கோடியனொடு எக்காளம் கிற்றார்
பேரொலி எழுப்பின் பொறுத்திடலாமோ?

திருவிழா திருமணம் திருநிறை சபையினில்
பேர் அரவத்துடன் பெருக்குவர் ஒரொலி
போரிசை தன்னைப் பண்ணொடு இசையாய்ப்
பாடினர் பாரீர் பண்டைய மக்கள்
கேதாரம் அடாணு கேட்டிடும் இராகம்
போர் இசையாகப் பேரிகை கொட்டினர்
மங்கல இசைபோல் அமங்கல இசையில்
முகாரியோடு மோகனம் முறையொடு
இசைத்தனர்

நாதஸ்வரத்தொடு வீணு கானம்
சித்தார் வேய்ங்குழல் இனிய கானமாம்
காதில் விழுந்தால் கரும்பாய்ச் சுவைக்கும்
உள்ளத்தில் உவகையும் உடலின் நலமும்
முறையுடன் பேண முடியுமே யன்றோ?
கனியை விடுத்துக் காய்கொளல் நன்றோ?
துள்ளல் இசையும் துரித கதியும்
என்றும் எமது இசையிலும் உண்டு
சினிமா இசையெலாம் சீர் அற்றதன்று
சீரிய சினிமா இசையினைக் கேட்பினும்
பேரொலி எழுப்பிப் பரப்புதல் நன்றோ?

சத்தத்திற் பிறந்தது சங்கீதம் என்றால்
சத்தம் எல்லாம் சங்கீதம் அன்று
சத்தத்தால் இருதயம் நின்றிடல் கூடும்
நரம்பு மண்டலம் நலிவுறும் என்றார்
வித்தகர் விஞ்ஞான அறிஞர்கள் எல்லாம்
சத்தியம் சிவம் சுந்தரம் என்பார்
சத்தம் சிவமாய் நின்றது என்பார்
சத்தமும் சிவமும் ஒன்றெனக் கேட்டுச்
சத்தத்தைக் கூட்டின் சதாசிவம் ஆமோ?
சித்தங் கலங்கும் சாத்வீகம் அகலும்
சத்தம் பெருகின் சகலதும் அழியும்
சத்தங் குறைந்த சங்கீதம் கேட்டால்
சித்தம் எல்வாம் சிவத்தை நாடும்
சித்தத்தின் உள்ளே சத்தம் கேட்பின்
சங்கீதம் அங்கே சரியாய்க் கேட்கும்.

நவாலியூர்
நா. சச்சிதானந்தன்

# உதய மலைச் சாரலிலே

# ஒளிரும் சஞ்சீவி

வ. சிவராசசிங்கம் பி. ஏ. (சிறப்பு)

செல்வங்களுள் மேலான செல்வம் உடல் நலச் செல்வம்''. ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது ஆன்றோர் மொழி. நோயற்றவாழ்வு நான் வாழ வேண்டும் என இறைவனிடம் வேண்டுதல் செய்கின்றார் இராமலிங்க சுவாமிகள்.

உடல்நலம்இருந்தாலே வாழ்வினை நெறிபடுத்த வல்ல கல்விச் செல்வத்தினையும், வளம்படுத்த பொருட் செல்வத்தினையும் ஈட்டு தல் சாலும்.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும் ஐம்புல நுகர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவது தேகாரோக்கியம். ஐம்பொறிகளை உலகியல் இன்ப நுகர்விற்கும், தெய்வீக நெறிப்பட்ட மேலான வாழ்வுக்கும் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் ஐம்பொறியும் செவ்வனே தொழிற்படுதற்கு உடற்சுகம் ஆதாரமாதல் வேண்டும். ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'' என்பது திருமூலர் வாக்கு.

தெய்வீக உலகியல் செல்வங்களை நுகர்ந்து இன்புற்று வாழ்வதில் விருப்பம் வைத்து, உடல் நலத்தைப்பேணுவதிலும் வாழ்நாளை நீடிப்பதிலும் அக்கறையும் ஆர்வமும் கொள்வது மக்கள் இயற்கை.

சிரஞ்சீவியாக வாழும் நோக்கில் நோயுற்ற போது மணிமந்திர ஔடதங்கள் கொண்டு அவற்றை மாற்றியும், காயகற்பம் முதலாம் மருந்து உட்கொண்டும் யோக நெறி மூலமும் வாழ்நாளை நீடித்தும் சாதனை புரிந்தவர்கள் நம் ஆன்றோர்கள். அவர்கள் பற்றிய வரலாறுகள் எமது புராண இதிகாசங்களில் காணப்படுகின்றன. இன்னும் போர், விபத்து முதலியவற்றில் இழந்து போன உயிரை மீட்டுப் பெறுதற்கேற்ற உபாயத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர் எனப் பேசப்படுகிறது. இத்தகைய திறமை இருந்த உண்மையை இராமாயணத்தால் அறிகிறோம்.

இராம – இராவண யுத்தத்தின் உச்சக்கட்டமொன்றில், இராவணன் மகனாகிய மேகநாதன் மறைந்து நின்று அயன் படையை ஏவினன். அப் படையினழுத்த மாயத்தால் இலக்குவன், அனுமன், சுக்கிரீவன், அங்கதன் முதலாம் வீரர்கள் எல்லாம் அறிவழிந்து மாழ்கி விழ்ந்தனர்.

இதனை அறிந்து அவ்விடம் சென்று சேர்ந்த இராமபிரானும் துயரத்தால் ஆவி சோர்ந்து உணர்வொடுங்கினார்.

அந்நிலை கண்ட விபீடணன் அனுமனது அயர்வைப் போக்கி சஞ்சீவி மலையிருக்கும் இடத்தை யுணர்த்தி அங்குள்ள மருந்தினைக் கொண்டு வரும்படி கூறினன். அனுமன் தன் பேருருவங் கொண்டெழுந்து வான் வழியே சென்று கயிலையங்கிரிக் கப்பாலுள்ள



மருத்து மலையைப் பெயர்த்தெடுத்து வந்தனன் அம்மலையின் காற்றுப் பட்டதும் மூர்ச்சையுற்றுக் கிடந்தோர் அனைவரும் உயிர்த்தெழுந்தனர். இந் நிகழ்ச்சியைப் பல பாடல்களால் வருணித்துள்ளார் கம்பர்.

சஞ்சீவிபர்வதம், மேருமலைக்கப்பாலுள்ள மைநாகபர்வதமென்னும் நீலமலையினைக் கடந்து காணப்படுவது. இது கரியமலையெனவும் மருத்துமலையெனவும் பெயர் பெறும். சஞ்சீவி என்பது ஒருவகை மருந்துச் செடி. இம்மருந்துச் செடியின் மணங்கலந்த காற்றுப்பட்டவுடன் மூர்ச்சை தெளியும் என்பதும் உயிரற்றோர் உயிர் பெறுவர் என்பதும் ஐதீகம்.

சஞ்சீவிமலை பற்றிய செய்தி கந்தபுராணத்திலும் காணப்படுகின்றது. ஆனல் சஞ்சீவிமலை அங்கு அமுதசிக மந்தரமலை எனப் பேசப்படுகிறது.

சஞ்சீவி மலையிலே பல [illegible] வாம். மாண்டோரை உயிர்ப்பிக்கும் சஞ்சீவ கரணி; பிளவுற்ற உடலைப் பொருந்தவல்ல சந்தான கரணி; தைத்த படைக்கலங்கள் உடம்பில் தங்கி விட்டால் வெளிப்படுத்தும் விசல்ய கரணி; உரு மாறிய உடலை முன் போலாக்கும் சாவருணிய கரணி; ஆகியவை இருந்ததாக ஐதீகம்.

மூர்ச்சை தெளிவிக்கும் மூலிகையின் நாமத்தை மகுடமாகக் கொண்டு சஞ்சீவிஎன்னும்சஞ்சிகை வாரந்தோறும் மலருவது தமிழ் வேட்கையுடையார்க்கும் ஆர்வலர்க்கும் அமுதமான செய்தியே.

சஞ்சீவி மலையில் மாண்டாரை உயிர்ப்பிக்கும் சஞ்சீவகரணி விளங்குகிறது. அது போன்று தமிழில் வெளிச்சங்காணுது மறைந்து கிடக்கும் இலக்கியங்களை சிறப்பாக ஈழத்துக் கவிஞர்களின் கவிதைச் செல்வங்களை வெளிக் கொணர்ந்து உயிர்ப்பூட்டி மறுமலர்ச்சியளிக்கும் இலக்கிய சஞ்சீவகரணியாக வாரஇதழ் விளங்க வேண்டும்.

இன்னும் வழக்கொழிந்து மறைந்து போன சொற்களை மீட்டு உபயோகத்திற்குக் கொண்டு வரவேண்டும். அறிவு வளர்ச்சியால் கருத்துகள் விரிவுபெற சிந்தனைச் சாயல்களின் நுண்ணிய வேறுபாடுகளைப் புலப்படுத்தவல்ல சொற்களும் பல்கிப் பெருக வழிசெய்ய வேண்டும்.

ஒரு மொழியின் சொல்வளம் வகையாலும் தொகையாலும் செழுமை பெறவேண்டுமெனில் மறைந்துபோன சொற் பிரயோகங்களைத் தேவை நோக்கிப் புதுக்கி வழக்கிற்குக் கொண்டு வருகல் அவசியம். ஆங்கிலத்தில் முதல் முதலாக அகராதி வெளியிட்ட கலாநிதி யோன்சன் போன்ற மாமேதைகளின் கருத்து இது.

முரிந்து, வீரருடலுள் புதைந்து கிடக்கும் படைத்துண்டங்களை வெளிக்கொணரும் விசல்யகரணிபோல் எழுத்துத் துறையில் ஈடுபடுவோர் சிலரின் படைப்புகளில் மலிந்து, மறைந்து கிடக்கும் மொழிவழுக்களை வெளிக்காட்டி மொழி நடையினை நெறிப்படுத்தும் பணியிலும சஞ்சீவி உழைக்கும் என எதிர் பார்ப்போமாக!

பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள், மேடைப் பேச்சாளர்கள் போன்றவர்களின் எழுத்திலும் பேச்சிலும் உள்ள இலக்கண மரபியல், பொருள் வழுக்களை எடுத்துக் காட்டுதல் அவசியமாகிறது.

சஞ்சிகைகளில் இடம் பெறும் தவறுகளை வாசகர்களே, பத்திராதிபர்க்குச் சுட்டிக் காட்டுதற்கு வாய்ப்பாக நேயர்கடிதப் பகுதிக்கு இடம் ஒதுக்கப்படும் பாரம்பரியம் பத்திரிகை மரபில் உண்டு. இவையெல்லாம் மொழியின் செம்மையினையும் செழுமையினையும் கட்டுக்கோப்பையும் இளமையினையும் எழிலையும் பேணுதற்கியன்ற உத்திகளாம்.

மொழியை வளர்ப்பதில், வளம்படுத்துவதில் வழுப்புகாது வரம்பு பேணுவதில், பத்திரிகைகளின் பங்களிப்பு பாரியதும் சீரியதுமாகும்.

''என்றும் உள செந்தமிழ்'' என்பது கம்பர் பெருமானின் அமுத வாக்கு. அலையா நிலைபேறு அளிக்கும் ஆற்றலும தெவிட்டாச் சுவையும் அமுதத்தின் பண்புகள். கம்பன் வாக்கு பொய்யாமொழியாவது தமிழ்மொழி இன்றும் சீரிளமைத் திறத்தோடு திகழ்வதால் உணரலாகும்.

நமது மொழி சிரஞ்சீவியாக வாழ்ந்து நிலைபெற்று மிளிர்வதற்கு சஞ்சீவியாக விளங்குவது அதன் இலக்கணமரபெனில் தவறொன்றுமில்லை. மொழியின் உயிர் நாடியான இலக்கண வரம்பு பேணும் அதே வேளை பிற மொழிப் பொக்கிஷங்களில் காணப்படும் அரிதாய சிந்தனைச் செல்வங்களை நம் மொழிக்கு வாய்க்காலமைத்துக் கொண்டு வர வேண்டும்.

அறிவுவளம் பெருக்குதற்கு 'உதய' மலைச் சாரலில் முளைகொள்ளும் சஞ்சீவி இவ்வாய்க்காலாக அமைந்து சந்ததமும் சந்தமிகு பணியாற்றித் தழைத்துமேலோங்க தமிழன்னை கருணை பொழிவாளாக!

## கவிதைப் பூக்கள் சாத்திய கவிஞர்

மறைந்த அன்பு மனைவியின் நினைவாக தினமும் கவிதை பாடினார் ஜெர்மன் கவிஞர் ஒருவர்.

கார்ல் வில்ஹெம் ஜெர்மன் நாட்டில் பிரபலம் பெற்ற எழுத்தாளராக, கவிஞராக 1767–1835 காலத்தில் வாழ்ந்தார்.

அவரின் அன்பு மனைவி 38வருட திருமண வாழ்வின் பின்னர் இறந்து போனார். கவிஞரை மனைவியின் மறைவுவெகுவாக வாட்டியது.

மனைவியின் நினைவாக தினமும் 100 வரிகள் கொண்ட கவிதைகளை யாத்து மனைவியின் சமாதியில் இவர் வைத்து வந்தார். ஒரு நாள் கூட தவறாமல் மனைவியின் சமாதியில் கவிதைப் பூக்களை சாத்தி வந்தார். இப்படி ஒன்று [illegible] வந்தார்.

## காத்து கிடப்போம்

கல்லால்
முள்ளால்
காட்டால்
நடப்போம்
கால்கள் ஓயும் வரை
ஓடி நடப்போம்
காட்டுமிராண்டிகள்
வேட்டைக் காடா
நம் பூமி?
காத்துக் கிடப்போம்
சுதந்திரக் கனியை
போராடி——

## நேற்று இன்று நாளை

நேற்றைய காலம்
வெளி நாட்டார்–
கையில்
இன்றைய காலம்
இவர்களின் பிடியில்
நாளைய காலமாவது
நம்மிடம் வரட்டுமே.

## எங்கே நிறுத்துவது?

எமது விளைநிலத்தில்
வியர்வைத்துளிகளை
விதைத்து
பயிராக்கி
பயன் எடுக்கும்
–நேரத்தில்
பயிரை எரித்து
பார்த்துச் சிரிக்கின்ற
நீசர்களை
எங்கே நிறுத்திடுவோம்
--பசுவூர் கோபி--

## அருமையும் பெருமையும்

சிறுவர்கள்
சிலருக்கு
புதுவருடம்
புதுமையாய்
இனிமையாய்
இல்லையாம்
பாடசாலையில்
பாடப்புத்தகம்
பழையதாய்
கொடுத்ததே
காரணமாம்.
நுணுவில் நாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

இரு மாத குறுநாவல்

# சிறகுப் பறவைகள்

து. வைத்திலிங்கம்



அந்த விடியற்கால வேளையில் முருகன் கோயில் மணி ஓசை கிராமத்துக்கே பள்ளி எழுச்சி பாடியது. சொல்லி வைத்தாற்போல் காளி கோயில், வராகி அம்மன் கோயில், சந்தி வைரவர் கோயில் என்று மணிகள் எல்லாம் ஒருமுறை அடித்து ஓய்ந்தன. அன்றைய வாழ்வு இரவுப் போர்வையை உதறி எறிந்து விட்டு எழுந்துகொண்டது.

வழக்கம்போல் முதல் மணி ஓசையிலேயே திலகம் விழித்துக் கொண்டாள். இரவு முழுவதும் எரிந்த படுக்கை அறை லைற் அவளைப் பார்த்து புன்முறுவல் செய்தது. அதை அணைத்தாள். பெரிய பல்ப்பை எரிய வைத்தாள். அறை எங்கும் ஒளி பரவியது. முதலில் தன் வலது உள்ளங்கையைப் பார்த்துக் கொண்டாள். 'தினமும் எழுந்ததும் உள்ளங்கையையும் பார்த்து பின் கண்ணாடியையும் பார்'. — அவளின் பெரிய தாயார் என்றோ ஒரு நாள் பேச்சுவாக்கில் கூறி வைத்தாள். திலகம் அன்று தொடக்கம் அந்த வழக்கத்தைப் பின்பற்றி வருகிறாள்.

ஆனால்,

இதனால் வந்த நன்மைகள் என்ன...?

திலகத்தின் உள்ளத்தில் விடை கிடைக்காத பெரிய கேள்விக்குறியாக இது அனேக நாட்களாக நிற்கிறது.

அனேக நாட்களா...

இல்லை இல்லை!...

அனேக வருடங்களாக!

கண்ணாடி அவளின் இயற்கையான தோற்றத்தைக் காட்டியது. சீப்பை எடுத்து முன் நெற்றியை மறைத்த கூந்தலை ஒதுக்கிவிட்டாள்.

இரண்டொரு வெள்ளிக் கம்பிகள் தலைகாட்டி மறைந்தன.

அவளுள் ஒரு குறுகுறுப்பு.

இது தினமும் நடக்கின்ற சங்கதிதான்.

காலையில் தலை ஒதுக்கிச் சீர்செய்யும் சமயம் 'இதோ நாங்களும் இருக்கின்றோம்' என்று கூறாமல் கூறும் நரை மயிர்களைக் கண்டதும் அவளுக்கு இனம்புரியாத வேதனை, கோபம், ஆற்றாமை எல்லாம் சேர்ந்தே வரும்.

தான் ஏதோ வஞ்சிக்கப்பட்டுவிட்டதாக இந்த உலகத்தின்மீதே தாங்கமுடியாத ஆத்திரம் தோன்றும்.

ஆனால் அந்தக் கோப உணர்வுகள் வந்த சுவட்டிலேயே மறைந்து விடும். பழையபடி அவள் சாந்தமாகி விடுவாள்.

அறையைவிட்டு மெதுவாக வெளியே எழுந்து வந்தாள். எல்லா விளக்குகளையும் எரியவிட்டால் மற்றவர்களின் நித்திரை கலைந்துவிடும் என்பதற்காக நடு அறை லைற்றை மட்டும் எரியவிட்டு அதன் வெளிச்சத்தில் பின்பக்கம் சென்றாள். எல்லா லைற்றுகள் எரிந்தாலும் வீட்டில் பெரிய ரகளை வந்துவிடும். திலகத்தின் தந்தை கனகசபை காலையில் எழுந்து வரும்போது லைற்றுகளைக் கண்டால் கத்துவார்.

'கரண்டுக் காசு ஆயிரக் கணக்கில வரப் போகுது. அணையுங்கோ லைற்றுகளை!'

உலகமே அழிந்தது போலக் கத்துவார். அந்தக் கத்தலுக்குப் பயந்து யாரும் அந்த வீட்டில் தேவையில்லாமல் லைற் எரிய விடுவதில்லை.

காலைக் கடன்களை முடித்துக்கொண்ட திலகம் கேற்றிலைக் கழுவி அடுப்பை மூட்டினாள். பின்னர் பெரிய எவர்சில்வர் வாளியைத் தூக்கிக் கொண்டு மாட்டுக் கொட்டிலை நோக்கிச் சென்றாள். லைற் வெளிச்சத்தில் வெள்ளை ஜேர்சிப் பசு கனத்த மடியுடன் எழுந்தது. கன்றுக்குட்டி அவளைக் கண்டதும் ஒருமுறை குரல் கொடுத்தது. அதன் கழுத்தை ஆசையோடு தடவிவிட்டாள். அவளின் கை பட்டதும் கன்றுக் குட்டியின் கழுத்து ஒருமுறை சிலிர்த்தது. திலகம் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

பொங்கும் நுரையுடன் பாலை அடுக்களையில் கொண்டுவந்த திலகம் மேடையில் அடுக்கி வைத்திருந்த வெள்ளைப் போத்தல்களை நன்றாகக் கழுவினாள். பின் ஒவ்வொரு போத்தலாய் முகர்ந்து பார்த்தாள். அவளுக்கு திருப்தி வரவில்லை. மறுபடியும் கழுவினாள். மூன்று அரைப் போத்தல், இரண்டு அரைப் போத்தல் என்று பாலை நிரப்பி மேடையில் ஒழுங்காக வைத்தாள். தேயிலையை எடுத்து சாயம் வடித்து வைத்தாள். காலைத் தேநீருக்கான பாலை சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்தாள்.

இயந்திரம்போல் செயல்கள் நடந்தன.

இதற்குள் ஒவ்வொருவராக எழுந்து தங்கள் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

முதலில் அடுக்களைக்கு வந்த ஆள் பூரணம்.

'திலகம் பால் கறந்திட்டியே?'

'ஓமம்மா!'

தினமும் பூரணம் தன் மகளைப் பார்த்துக் கேட்கும் கேள்வி இது. அவளுக்கு நன்றாகத் தெரியும் திலகம் எல்லாம் ஒழுங்காய் மணிக்கணக்குப் பிரகாரம் ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பாள் என்று. ஆனாலும் அவள் திலகத்தை கேட்கத்தான் செய்வாள்.

அம்மாவின் போக்கு திலகத்துக்கு அத்துப்படி.

அவளும் சலிக்காமல் விடை கூறுவாள்.

'போத்தல் எல்லாம் வடிவாய் கழுவினனியே?'

'எல்லாம் வடிவாய்த் தான் கழுவினனான்.'

பூரணம் தேநீரைக் கலந்தாள். திலகம் தனக்கு அளவாய் ஒரு கப்பில் தேநீரை விட்டு மெதுவாகப் பருகினாள்.

'அம்மா ரீ!'

சரசு அட்டகாசமாய் நுழைந்தாள்.

'உன்னுடைய கிளாசை எடுத்து விட்டுக் குடி!'

'எடுத்து விட்டுத் தாருங்கோ அம்மா!'

'குழந்தைப் பிள்ளை மாதிரி நிற்கிறாய். மேடையில கிளாஸ் கிடக்கு விட்டுக் குடி சரசு.'

'என்னம்மா... எடுத்து விட்டுத் தாருங்கோ! பஞ்

## அத்தியாயம் ஒன்று

சியாய்க் கிடக்கு!' அவள் கீழே அப்படியே உட்கார்ந்தாள்.

'உனக்கு நெடுகலும் ஒரு பஞ்சி!'

திலகம் மௌனமாக எழுந்து ஒரு கிளாசை எடுத்து தேநீரை விட்டு அதை அப்படியே சரசுவிடம் நீட்டினாள்.

சரசு சினேகபூர்வமான ஒரு சிரிப்பை தன் முகத்தில் பரவவிட்டபடியே தன் தமக்கையை நோக்கினாள்.

'அப்பாவின்ரை கோப்பையைக் கழுவு திலகம்!'

பூரணம் திலகத்தைப் பார்த்துக் கூறினாள். திலகம் ஒரு பெரிய பச்சை நிறக் கோப்பையை எடுத்து நன்றாகக் கழுவி தாயிடம் நீட்டினாள்.

பூரணம் கோப்பை நிறைய தேநீரை நிரப்பி எடுத்துக்கொண்டு முன் விறாந்தைக்குச் சென்றாள்.

கனகசபைக்கு காலையில் தன் மனைவி பூரணத்தின் கையால்தான் தேநீர் வேண்டிக் குடிக்க வேண்டும். தற்செயலாய் திலகம் கொண்டுபோய் கொடுத்தால் அவர் முகம் மாறிவிடும்.

'எங்கை கொம்மா?'

'அவ அங்கை அலுவலாய் இருக்கிறா!'

'அவளுக்கு எப்பவும் அலுவல்தானே. நீங்கள் இரண்டு பேர் இருக்கிறியள். மாறிக்கீறிச் செய்து கொடுத்தால் என்ன?'

அப்படியான கத்தல்கள் எல்லாம் திலகத்துக்கும் சரி சரசுவுக்கும் சரி பழகிவிட்டது.

தாயார் தேநீர் கொண்டு போவதையே பார்த்துக் கொண்டிருந்த சரசு 'களுக்'கென்று சிரித்தாள்.

'என்ன சரசு சிரிக்கிறாய்?'

திலகம் புரியாமல் கேட்டாள்.

'இல்லை, புது மாப்பிள்ளைக்குக் கொண்டு போவதுபோல அம்மா போகிற வடிவைப் பார்....'

குறும்பு தவழ சரசு முன் வாசலைப் பார்த்தபடியே கூறினாள்.

திலகத்துக்கு முகம் கறுத்தது.

'ஏன் கொண்டு போனால் என்ன? அப்பாவுக்குத்தானே அம்மா கொண்டு போறா.'

'நீ ஒரு மக்கு! இப்பவும் அப்பா புது மாப்பிள்ளைக்கு நடிக்கிறார். நாங்கள் இரண்டு குமர் வீட்டில இருக்கிறம்...'

சரசு வார்த்தைகளை முடிக்காமல் முகத்தை நெளித்தாள்.

'சரசு நீ எழும்பு! போய் சந்திரனை எழுப்பு. பால் கொடுக்க நேரமாச்சு.'

திலகம் சரசுவை வெளியே அனுப்ப எத்தனித்தாள்.

சரசு சொல்வதும் உண்மைதான்.

கனகசபை வீட்டில் நடந்துகொள்ளும் முறைகள் சரசுவை அவ்வாறு பேச வைத்துள்ளன.

ஆனாலும் திலகம் பேச்சிலோ செயலிலோ அவைகளை எதிர்க்கவோ, அவைபற்றி விமர்சிக்கவோ ஒரு நாளும் முனையவில்லை.

'இவர் பெரிய மைலோட் மகாராசா. நித்திரையால எழும்பிற நேரத்தைப் பார்!'

கனகசபையின் குரல் வீடெங்கும் ஒலித்தது.

'நேரத்துக்கு எழும்பி நான் நடு வீட்டில நிண்டு கூத்தாடவே!'

தன்பாட்டில புறுபுறுத்துக்கொண்டு கிணற்றடியை நோக்கிச் சென்றான் சந்திரன்.

'என்னடா புறுபுறுக்கிறாய்?'

தான் சாய்ந்து படுத்திருந்த ஈசிச் செயரை விட்டு ஒரு அரை அடி எழும்பினார்.

'அவன் இப்பதான் படுக்கையால எழும்பி வாறான். நீங்கள் பேசாமல் கொஞ்சம் இருங்கோ!'

மகனுக்காக பரிந்துவந்தாள் பூரணம்.

'ஓ நீ அவனுக்கு புறக்கிறாசி வேலை பார்! மாடு மாதிரி வளர்ந்திருக்கிறான். ஒரு உருப்படியான வேலை பார்க்கத் தெரியாது.'

தன்பாட்டில் ஏதேதோ சொல்லிக்கொண்டே முன் அறைக்குச் சென்றார் கனகசபை.

சந்திரன் முகம் கழுவிவிட்டு உள்ளே வந்தான்.

'சந்திரன், ரீயைக் குடி! குடிச்சுப் போட்டு பாலைக் கொண்டுபோய்க் கொடு!'

திலகம் கூறினாள்.

'இது எனக்கு ஒரு கண்டறியாத உத்தியோகம்!'

சலித்துக்கொண்டே தேநீரை உறிஞ்சினான்.

'அவை அவைக்கு விருப்பமெண்டால் பாலை இஞ்சை வந்து வாங்கினால் என்ன? விடியக் காத்தால நான் வீடு வீடாய் திரிய வேணும்'

பத்து வயது முதல் அவன் இந்த வேலையைச் செய்து வருகிறான். உண்மையில் அவனுக்கே அது அலுத்துவிட்டது.

'மனுசன் எண்டால் ஏதாவது வேலைக்குப் போகவேணும். சனியன் பிடிச்ச காலம் ஒண்டும் சரிவருகுது இல்லை.'

தேநீர்க் கோப்பையை கீழே வைத்தான்.

'அந்த வங்கி உத்தியோகம் சரிவராது என்ன?'

திலகம் அவனை நோக்கினாள்.

'வங்கியோ... இருக்கிற வங்கியும் மூடிக் கிடக்கிறது. இனி இருபதினாயிரம் முப்பதினாயிரம் எண்டுதானே கேக்கினம்! இந்த மனுசன் ஐந்து சதம் தராது.'

சந்திரனின் பார்வை முன்பக்கம் சென்றது.

'சரி சரி நீ எழும்பு! போத்தல்களை கவனமாக எடுத்துக்கொண்டு போ!'

திலகம் அவசரப்படுத்தினாள்.

அவளுக்கு வீட்டில் ரகளை ஒன்றும் ஏற்படக் கூடாது என்ற கவலை.

இருந்தாற்போல் மேளச் சத்தம் கேட்டது.

'என்ன விசேஷம் கோயிலிலை? காலைமை மேளம் கேட்குது.'

பூரணம் கேட்டபடி உள்ளுக்குள் வந்தாள்.

'அது கடைக்கார குமாரசாமியின்ர மகளுக்குக் கல்யாணம். அவை கோயிலிலைதான் வைச்சுச் செய்யினம்!' சரசுவிடை கூறினாள்

'உனக்கெண்னண்டு தெரியும்?'

'நேற்று நான் கந்தோரால வாறபொழுது மணவறை கட்டிக் கொண்டு நிண்டினம்.'

'குமாரசாமியின்ரை மூத்த மகள் எண்டால்... திலகத்தோடை படிச்ச பெட்டையோ?'

பூரணம் கேட்டுக் கொண்டே முன்னுக்குச் சென்றாள்.

'ஊர் உலகமெல்லாம் கலியாணம் நடக்கட்டும். நீங்கள் இரண்டு பேரும் பார்த்துக் கொண்டு இருங்கோ!'

சரசு மெதுவாகக் கூறினாலும் திலகத்துக்கு அது கேட்டுவிட்டது.

'சரசு, நீ போய் குளித்துவிட்டு வாவன். நேரமாகுது.'

சரசு சூழ்கொட்டிக் கொண்டே கிணற்றடிக்குச் சென்றாள்.

கனகசபை பரம்பரைப் பணக்காரர். பன்னிரண்டு பரப்பு வளவில் பெரிய வீடாகக் கட்டி, பின்பக்கம் நெல்லு வைக்கவென்று இரண்டு அறைகள் கொண்ட கூடமொன்றும் பெரிய மாட்டுக் கொட்டிலுமாய் அந்தக் கிராமத்திலேயே பணக்காரக் கனகசபை என்ற பெயருடன் இருக்கின்றார். மறவன்புலோவிலும் பரந்தனிலும் பத்து பத்து ஏக்கர் வயல்கள் உண்டு. இதைவிட அடைவுபிடிக்கும் தொழிலும் நடக்கின்றது. வட்டிக்கு வட்டி வேண்டி ஊராருடைய வயிற்றெரிச்சலை தாராளமாக கட்டிக்கொண்டவர்.

ஆனால் சலசலப்புக்கு அஞ்சாத பனங்காட்டு நரியைச் சேர்ந்த சென்மம்.

என்னட்டைக் காசு இருக்கிறது ! ஆர் என்ன செய்ய முடியும் !

இந்த ரீதியில் கதை போகும். (வளரும்)

## செய்தியாளரும் ஒரு தும்பி

நாவில் இனித்து உடலுக்கு ஊட்டந் தருவது தேன். சிந்தையில் இனிக்கும் ஆரோக்கியம் வாய்ந்த தேனொத்த கருத்துக்களை உங்களுடன் பரிமாறும் இப்பத்தி தேன்கூடு.

தேன்கூடு என்றதும் சங்க காலப் புலவர் ஒருவர் தேனீயிடம் சொன்ன நல்ல செய்தி நினைவுக்கு வருகிறது. இனிய செய்தி கூறும் தேனூர் பாடலின் பொருளைப் பார்ப்போம்.

அவள் சிரிப்பில் அழகிய முத்துப்போன்ற பற்கள் தோன்றும். மயிலைப் போன்று இனிமையும், அழகும் ததும்பும் சாயலை உடையவள் அவள். அவளுடைய நட்போ பழகுவதற்கு நல்லின்பம் தருவது. இத்தகைய அழகு நங்கையின் கூந்தலின் மணத்தை விஞ்சும் நறுமணம் வேறு எதற்கும் உண்டோ? இதுவே புலவருக்கு எழுந்த ஐயம். அதுவே அவர் பிரச்சினை.

இதனைத் தும்பியிடம் கேட்டு விடை காணத் துடிக்கிறார் காதல் கொண்ட புலவனார். தேனீயைத் தும்பி என்றும் அழைப்பர். மணிவாசகப் பெருமான் மக்கட் தும்பிகளாம் நமக்குப் பாடிய பாடல்கள் திருக்கோத்தும்பி பதிகமென விளங்குகிறது.

தேனீக்கள் அழகிய சிறகுகளை உடையவை. வண்ண வண்ணப் பூக்களை நாடிப் பூஞ்சோலைகளை வட்டமிட்டு ரீங்காரிப்பவை. முகரும் ஆற்றல் மிகவும் நுட்பமாக உடையவை. தேனீக்களிடம் சிறந்த குணவியல்புகள் உண்டு. குன்றா முயற்சியுடன் உயரவே பறந்து, நல்லன தேடிக் கூட்டாகச் சேர்ந்து குடும்பமாக வாழ்பவை.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி காமம் செப்பாது கண்டது மொழிமோ மயிலியது செறிஎயிற்று அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே"

இக்குறுந்தொகைப் பாடலைப் பாடியவர்

தேன்கூடு

இறையனார் என்ற இன் தமிழ்ப் புலவர். குறுந்தொகை என்னும் அகத்துறை இலக்கியத்தில் இரண்டாம் பாடலான பெருமை இப்பாவுக்கு உண்டு.

இன்னொரு சிறப்பும் இப்பாடலுக்கு உண்டு. தருமி என்ற வறியவன் பாட்டுப் பாடிப் பரிசில் பெறவேண்டி இறைவனே தந்த பாட்டு இது வென்றும் கூறுவர். அதனாலே இப்பாடலைப் பாடியவர் பெயர் இறையனார் ஆயிற்று என்பர்.

சுந்தரனார்

இவற்றை எல்லாம் விஞ்சிய சிறப்பொன்றை நாம் இப்பாடலில் காண்கிறோம். "சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு இடங்கொடாது, கண்டதைக் கண்டவாறே கூறு" என்றும் புலவர் அழுத்திக் கூறுகிறார். இவ்வழுத்தமே நம்மைக் கவர்வது "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" என்னும் அடியில் பாட்டின் உயிரைக் காணலாம்.

விமர்சனம், ஆராய்ச்சி, நீதி போன்ற துறைகளுக்கு மட்டுமன்றிப் பத்திரிகைத் துறைக்கும் வழிகாட்டியாக அமைவது இவ்வடி. இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்துள்ள விமர்சனக் கோட்பாடுகளின் சாரத்தைச் செறிவாக ஓர் அடியில் பாடிவிட்டார் சங்க காலப் புலவர் பெருமகன்.

மக்களுக்கு வேண்டிய செய்திகளை, கருத்துக்களைச் சேகரித்து தருபவர்கள் பத்திரிகையாளர்கள்.

நீங்கள் வெளியுலகை அறிய உதவும் உங்களது கண்களும் செவிகளும் பத்திரிகையாளர்களே.

பத்திரிகையாளர்களும் ஒருவகைத் தும்பிகளே.

இறையனாரின் பணிப்புரை பத்திரிகை உலகுக்கும் ஏற்புடையது.

'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ'

## பட்டினியின் கோலம்

எதியோப்பியாவில் கடும் பஞ்சம் நிலவுகிறது. இந்தப் பஞ்சத்தின் தாக்கத்தை நெஞ்சுருகும் வகையில் வெளிப்படுத்தும் செய்திகளையும் கதைகளையும் அவ்வப்போது கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாதிரிக்கு ஒரு கதை. அங்கு ஓரிடத்தில் அருகருகே இருந்த இரண்டு எலும்புக் கூடுகள் பேசிக் கொண்டனவாம்.

ஹலோ! வணக்கம்!'

'வணக்கம்.'

"நீங்கள் பஞ்சத்தில் செத்தவரா அல்லது பஞ்சம்வரமுன் செத்தவரா?"

'மன்னிக்க வேண்டும். நான் இன்னும் சாகவில்லை. பஞ்சத்தில் பட்டினியால் எலும்புக்கூடாகியிருக்கிறேன்.'

ஓ! எத்துணை கொடூரம்

## தினமும் 38 பேர் சுட்டுக் கொலை

அமெரிக்காவில் நாள்தோறும் சராசரி 38 பேர் சுட்டுக்கொலை செய்யப்படுகிறார்கள். 45 பேர் சுட்டு தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இது தவிர, சராசரி தினமும் ஐவர் தற்செயலாக நடைபெறும் துப்பாக்கிச் சூடுகளில் பலியாகிறார்கள்.

அமெரிக்காவில் வீதி விபத்துக்களுக்கு அடுத்தபடியாக துப்பாக்கிக் குண்டுகளுக்குத்தான் அதிகமானவர்கள் பலியாகிறார்களாம்.

## பிரதமருக்கு மாணவன் விட்டகுத்து

மனநோயினால் பீடிக்கப்பட்ட ஒரு மாணவன் தாய்லாந்து பிரதமரின் முகத்தில் கையினால் குத்தினான்.

ராம்கம்ஹம் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு திரும்புகையில் கூட்டத்தோடு கூட்டமாக நின்ற 27 வயதான மாணவன் ஒருவன் பாய்ந்து சென்று பிரதமர் பிரேம் டின்சுலன்டாவின் முகத்தில் கைகளினால் குத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் மெய்க்காப்பாளர்கள் உடனடியாக அந்த மாணவனைக் கைது செய்தனர். பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான மாணவனாகப் படித்து வரும் இம்மாணவன் அடிக்கடி மன நோய்க்கு ஆளாகி வந்ததும் தந்தையுடன் பல [illegible] விசாரணையில் தெரியவந்தது.

பொலன்னறுவை நாபேன விகாரை

# பௌத்த தலம் இல்லையாம்!

## சிவன் கோயில் என்கிறார் சிங்களப் பேராசிரியர்

பொலன்னறுவையில் உள்ள நாபேன விகாரை ஒரு பௌத்த தலம் அல்ல. மிகப் பெரிய சிவன் கோயில் அது.

பொலன்னறுவை அலஹன பிரிவன புதைபொருளாராய்ச்சித் திட்ட இயக்குநரான பேராசிரியர் திரு பி.எல். பிரேமதிலக மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அண்மையில் பொலன்னறுவையில் இரண்டு சோழர்கால இந்துக் கடவுள் விக்கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்தே மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டது.

முக்கோண கலாசாரத் திட்டத்தின்கீழ் பொலன்னறுவை அலஹன பிரிவன பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறுகிறது.

அப்போது தான் மேற்படி இரண்டு சரித்திர கால சிற்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த விக்கிரகங்கள் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பேராசிரியர் திரு. பி. எல். பிரேமதிலக இதனை உறுதிப்படுத்தினார்.

இப்பகுதியில் பெருந்தொகையான இந்துக் கோயில்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன என புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருப்பதாக அவர் கூறினார்.

சூரிய பகவான், பரசுராமர் ஆகிய இரண்டு விக்கிரகங்களே கண்டு பிடிக்கப்பட்டன.

சிவன் கோயிலின் சுவர்களிடையே இந்த விக்கிரகங்கள் காணப்பட்டன.

சூரியபகவானின் விக்கிரகம் கல்லினால் செய்யப்பட்டது. இது ஒரு அருமையான கலைப் பொக்கிஷம்.

கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு விக்கிரகங்களும் நல்ல நிலைமையில் காணப்படுகின்றன.

இப்படிப்பட்ட இந்து விக்கிரகங்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.

நாபேன விகாரை ஒரு பௌத்த விகாரை அல்ல. மிகப் பெரிய சிவன் கோயில் அது. அந்த விகாரையில் கண்டுபிடிக்கப்பட்ட மலர்களைப் போன்றே, இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட விக்கிரகங்களின் கைகளில் காணப்படும் மலர்களும் உள்ளன,

எஞ்சியுள்ள நாபேன விகாரையின் செங்கற் சுவர், நாகபாம்பின் படத்தைப் பிரதிபலிக்கின்றது.

"அனுராதபுரத்தில் உள்ள தொல்பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய தான நடராஜரின் வெண்கலச்சிலையும் சிவலிங்கமும் நாபேன விகாரையில் கண்டுபிடிக்கப்பட்டவையே" - இப்படி பேராசிரியர் பிரேமதிலக சொன்னார்.

## நாய் சூப் விடுதிகளுக்கு தென் கொரியாவில் மூடுவிழா

அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி, தென்கொரியாவின் தலைநகரான சோலில் 1988 இல் நடைபெறவுள்ளது அல்லவா !

அதற்கு முன்னோடியாக சோல் நகரில் உள்ள நாய் சூப் பரிமாறும் உணவுச் சாலைகளை மூடிவிடும்படி தென் கொரிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சில உணவு விடுதிகள் மூடப்பட்டாலும், கொரிய மக்களின் பலத்த வேண்டுகோளின் மீது மீண்டும் திறக்கப்பட்டு உள்ளன.

பகிரங்கமான இடங்களைத் தவிர்த்து ஒதுக்குப் புறமான இடங்களில் இவ்விடுதிகள் மீண்டும் நடைபெறுகின்றன.

வெளிநாட்டு விலங்கு நண்பர்களின் விருப்பத்திற்காக நாய் சூப் உண்ணும் எமது பாரம்பரிய வழக்கத்தைக் கைவிட முடியுமா? இப்படி கொரிய மக்கள் வினவுகின்றனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மத்தியில் நாட்டைப் பற்றி நல்ல அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்தவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக தென்கொரிய அரசாங்கம் கூறுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கு நாட்டு தூதர் ஒருவர் நாய் சூப் உணவு விடுதிக்குச் சென்று நாய் சூப்பை அருந்தி விட்டு, அதன் சுவை குறித்து ஆனந்தப்பட்டார். ஆனால் தனது பெயரை வெளியிட வேண்டாம் என்று கூறி விட்டார்.

## கருத்தடைக்கு கொட்லிவர் ஒயில்

சீன விஞ்ஞானிகள் ஆண்களுக்கான கருத்தடை முறை ஒன்றை அண்மையில் கண்டு பிடித்தனர்.

ஆண்களின் விந்து வழிக் குழாயில் மீன் எண்ணெய்யை (கொட்லிவர் ஒயில்) ஊசிமூலம் ஏற்றுவதன் மூலம் கருத்தடை ஏற்படுவதாக இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய முறையின் மூலம் ஆண்களின் தாது நான்கு மாதங்களுக்குத் தடைப்படுகிறது. எனினும் இதனால் அவர்களின் பாலியல் வேகத்தில் எந்தவித பாதிப்பும் ஏற்படாதெனவும் அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள்

## ரைட் சகோதரர்கள் அல்லர்

## அச்சாதனையைப் புரிந்தவர் இந்தியரே!

விமானத்தை முதலில் கண்டு பிடித்தவர் யார்?

'ரைட் சகோதரர்கள்' என்று பட் என்று பதில் வந்து விடும்.

ஆனால் உண்மை இது வல்ல. ரைட் சகோதரர்கள் இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்கு முன்னரே, இந்தியாவைச் சேர்ந்த ஒருவர், விமானத்தைக் கண்டுபிடித்து வெற்றியும் அடைந்தார்.

பம்பாயில் சௌபாத்தி என்ற இடத்தில் 1895 ஆம் ஆண்டு இந்தியர் ஒருவரால் தயாரிக்கப் பட்ட விமானத்தின் வெள்ளோட்டம் இடம் பெற்றது.

சிவ்கர் பாபுஜி தல்பாடே என்பவர்தான் விமானத்தை முதன் முதலில் தயாரித்தவர். பம்பாயில் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணி புரிந்த இவர், சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் ஆராய்ச்சியாளரும் விமர்சகருமான பெரும் புகழ் பெற்றவர். 'குரு மந்திர மஹிம', 'போகசாஸ்திர கா பூதார்த்தா தர்ஷன்' ஆகிய இரண்டு நூல்களையும் எழுதியவர்.

இவற்றிற்காக கர்வார் சங்கராச்சாரிய சுவாமிகளால் 'வித்ய பிரகாஷ் பிரதீப்' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

இவர் தயாரித்த விமானத்தின் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் அப்போது பிரபலமாக இருந்த ஸ்ரீ மகாதேவ கோவிந்த ரானடே, பரோடாவைச் சேர்ந்த நியாயமூர்த்தி ரானடே ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

வேதாந்த இலக்கியத்தில் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக ரிக் வேதத்தில் விமானம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்ததை அவதானித்தார்.

அப்படி விமானம் இருந்தது என்பதை நிரூபிக்க வேண்டும் என்று இவர் இறுதிவரை உழைத்தார்.

பரத்துவாஜ முனிவரும் இதுபற்றி நீண்ட தொகுவிமர்சனம் எழுதியிருந்தார். அதில் ஒரு பகுதிதான் இவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அதை வைத்துக் கொண்டே அவர், விமானத்தைத் தயாரிக்கும்

### எஸ். ஜி.

முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்.

19 ஆம் நூற்றாண்டில் பம்பாயில் அவரால் விமானத்தைத் தயாரிக்க வேண்டிய தேவையான பொருள்களைப் பெறுவது கஷ்டமாக இருந்தது.

விமானத்தை எப்படியாவது தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வம், அந்தக் கஷ்டங்களையும் மீறி அவரை இயங்க வைத்தது.

அவருக்குத் துணையாக இருந்தவர் அவரது துணைவியாரே.

வேதத்தில் கூறப்பட்ட படி விமானம் எட்டுப் பிரிவுகளாகத் தயாரிக்கப் பட்டு ஒன்று சேர்க்கப் பட வேண்டும்.

மெர்குரி (ரச) சூரிய ஒளி சேர்க்கை மூலம் விமானத்திற்குத் தேவையான வேகத்தைக் கொடுக்கலாம் என்று பரத்வாஜ முனிவர் எழுதி இருந்தார்.

கிடைத்த தகவல்களை வைத்து சிவ்கர் பாபுஜி தல்பாடே விமானத்தைச் செய்து முடித்தார்.

வேத காலத்தில் கூறப்பட்டபடி தயாரிக்கப் பட்ட விமானத்தைப் பார்ப்பதற்காக ஏராள மானோர் அவரின் வீட்டிற்குப் படை எடுத்தனர்.

இதைத் தொடர்ந்து, பம்பாய் நகர மண்டபத்தில் விமானம் பொது மக்களின் காட்சிக்கு வைக்கப்பட்டது.

மேலும் பல திருத்தங்களைச் செய்து அந்த விமானத்திற்கு 'மாருத் ஸக்கா' என்று பெயரிட்டார்.

வெள்ளோட்டத்தின் போது விமானம் 1500 அடி வரை மேலே வான வெளியில் பறந்து சென்றது. இழந்த பெருமையை மீண்டும் இந்தியா பெறமுடியும் என்பதும் இதன் மூலம் நிரூபிக்கப்பட்டது.

(மூலம்:— கிரிலோஷ்கர் — மராத்தி)

(ஆங்கிலத்தில்:— மிரர்)

### கையை இழப்பதும் பாரம்பரியம்

1930 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதி வாஷிங்டனைச் சேர்ந்த வில்லியம் லுப்ஸ்டன், டிராக்டர் விபத்து ஒன்றில் இடது கையை இழந்தார்

இது அல்ல புதுமை!

அவரது குடும்பத்தில் அவருக்கு முன் பிறந்த நான்கு தலைமுறையினரும் இப்படி இடது கரத்தை விபத்துக்களில் இழந்தார்கள் என்பது தான் புதுமை.

வில்லியத்தின் வயதிலே இப்படி நால்வரும் இடக்கையை இழந்தனர்.

### பெயர் விற்கும் பெரியோர்கள்

'பெயரை' அடகு வைத்து கடன் வாங்கும் பழங்குடியினர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாழ்கின்றனர்.

குவாக்கிபுல் இந்தியர் தான் அப்பழங்குடியினர்.


பணம் வேண்டும் என்றால் இப்பழங்குடியினர் தங்கள் 'பெயர்' களை அடகு வைத்து கடன் பெறுவர்.

கடனைத் தீர்க்கும் மட்டும் அவர்கள் தங்கள் 'பெயர்' களைப் பாவிக்க முடியாது.

'பெயர்' இல்லாதவர்களாகத் தான் நடமாட வேண்டும். கடனைத் தீர்க்க பின்னர் தான் மீண்டும் 'பெயர்' கிடைக்கும்.

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 1



### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் ''சொற்சிலம்பம்'' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.

3. 'சஞ்சீவி' யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் ''சொற்சிலம்பம்'' போட்டி இல 1, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ்லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

அனுப்புபவர் பெயர்:-..................................

விலாசம்:- ..................................

..................................

கையெழுத்து:- ..................................

**இடமிருந்து வலம்:-**

1. இதைப் பெறவே விடுதலைப் போர்.
5. பாழ்படுதலை இது பிடித்தல் என்பார்கள்.
6. பொருள்களை இங்கே வாங்கலாம்.
7. பெண்ணிற்கு அவசியமான பண்பு.
8. சமனான நான்கு பக்கங்களைக் கொண்டது.
9. பெரும் செலவில் அரசாங்கம் திரட்டுவது. இங்கு சிலவேளைகளில் தலைமைப் பீடத்துக்கு அடங்காமல் வெறி கொண்டு செயற்படுவது.
10. வாத்தியங்களில் ஒன்று.
11. விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அவதானத்துடன் இதனைச் செலுத்த வேண்டும்.
13. ஒரு நோய்.
14. வானம் பொய்த்தால் தலைவிரித்தாடும்.
16. விதைத்தவன் அறுப்பது.
17. அநேக பெண்களின் தலையில் இருப்பது. இரண்டு எனவும் பொருள்படும்.

**மேலிருந்து கீழ்:-**

1. நாடு இதை நோக்கிச் செய்வதாக சில பிரமாதங்கள் பீற்றிக்கொள்கின்றன.
2. பயங்கரவாதத்திற்கு இந்தச் சட்டம்
3. எந்தக் கருமமும் இது இன்றி ஆரம்பிக்கக் கூடாது.
4. சுடுவது. ஆனால் துவக்கல்ல.
6. கொடி இதில் பறக்கும்.
7. இங்குதான் நிகழ்ச்சிகள் நடக்கும்.
10. தமிழ்ப் புலவர்.
11. மணம்.
12. இல்லை என்பது இல்லை என்றால்?
13. இதிலிருந்து மனிதன் உருவானான் என்பது டார்வினின் வாதம்.
15. தலையில் நீண்டு கூட்டமாக இருப்பது.

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

### விசர் நாய் கடிக்கு செருப்படி வைத்தியம்

'நாய்கடிக்குச் செருப்படி' இது நம் நாட்டில் பேச்சில் இருக்கும் பழமொழி.

இது உண்மையா?

நாயினால் கடியுண்ட இடத்தில் செருப்பினால் அடித்தால் வைரஸ் தொற்று நோய் ஏற்படாமல் போய்விடுமா? இல்லை, உண்மையில் இது ஒரு மூடநம்பிக்கையே.

ஆனால் இந்தப் பழமொழியில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

செருப்படி என்பதன் பொருள் செருப்பால் அடிப்பதல்ல. உண்மையில் செருப்படி என்று ஒரு மூலிகை உண்டு. அதனை 'திருவடி பாதம்' என்றும் சொல்வர். விசர் நாய்க் கடிக்கு இது நிவாரணியாம்.

விசர் நாய்க் கடிக்கு இந்தியாவில் ஒருவர் செய்த வைத்தியம் சுவாரஸியமானது.

அவர் விசர்நாயினால் கடியுண்ட தனது மகளை எரிந்து கொண்டிருக்கும் பிணத்தின் முன்னே நிறுத்தி அப்புகையை இழுத்து சுவாசிக்கும்படி செய்வித்தாராம்.

இப்படி வேடிக்கையான மூடநம்பிக்கைகள் பல.

— சி. பிறைகுடி

### சக்தியைப் பெற ஊன் உண்பவர்கள்

பர்மாவில் உள்ள ஷான் மாநில மலைக்குடி மக்களிடையே ஒரு நூதனமான பழக்கம் நிலவுகின்றது

யுத்தத்திலே இறந்து போன எதிரிகளின் இருதயம், ஈரல் ஆகியவற்றின் பகுதிகளை உண்பார்களாம் இக்குடிமக்கள்.

இறந்து போனவர்களின் சக்தியை தாம் பெற்றுக்கொள்ள இது ஒரே வழி என்பது அவர்கள் கருத்து.

### சமஸ்கிருத மொழியில் தீர்ப்பு

இந்திய நீதிமன்றம் ஒன்றில் சமஸ்கிருத மொழியில் முதன் முறையாக தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது அலஹபாக்மல் நீல்மன்றத்தில் நீதியரசர் பன்வாரி லால் யாதவ் சமஸ்கிருத மொழியில் ஐந்து வழக்குகளில் தீர்ப்பு வழங்கி, வரலாறு ஒன்றை ஏற்படுத்தினார்.

எல்லா வழக்குகளும் காணி சம்பந்தப்பட்டவை. தீர்ப்புகளின் ஆங்கில, இந்திமொழி பெயர்ப்புகளும் வெளியிடப்பட்டன.

நீதியரசர் யாதவ், சமஸ்கிருத மொழியில் பட்டப் படிப்பை மேற்கொண்டவர்.

### 1 கோடி ஆண்டுக்கு முன் வாழ்ந்த குரங்கு

1 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மனிதனுக்கு முன்னோடியாக வாழ்ந்த இராட்சத குரங்கு ஒன்றின் எலும்புக்கூடு ஒன்றை சீன நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த மாதம் இது கண்டு பிடிக்கப்பட்டதாக நவசீன செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டது.

சீனாவில் சிகுவான் மாகாணத்தில் இந்த எலும்புக்கூடு கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தற்கால மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் இடைப்பட்ட மனிதனின் பரிணம வளர்ச்சியை இந்த எலும்புக்கூடு பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்றும் இச்செய்தி கூறுகின்றது.

## பெண்ணாக மாறவிரும்பும் அலி

### பொதுவாழ்வில் அவருக்கு பலசோதனைகள்

லண்டனைச் சேர்ந்த டீன் என்பவர் பெண்ணாக மாற முழு முயற்சி மேற்கொண்டுள்ளார். 17 வயதுடைய டீன், அலி வகையைச் சேர்ந்தவர். நடை, உடை பாவனை அத்தனையும் பெண்போல இருக்கும்.

மற்றவர்கள் தன்னை டீன் என்று அழைப்பதை விரும்பாத இவர், டீனா என்று அழைப்பதை குதூகலத்துடன் ஏற்றுக் கொள்கிறார். இவருடைய ஒரே ஆசை பெண்ணாக மாறிவிட வேண்டும் என்பதுவே.

பெண்ணாக மாறுவது குறித்து டாக்டரிடம் இவர் ஆலோசனை பெற்று வருகிறார். 'நீ பெண்களைப்போல் உடை அணியவேண்டும். பெண்களுடன் அதிகமாகப் பழக வேண்டும்' என்று டாக்டர் ஆலோசனை கூறினார். அது எந்தளவு அனர்த்தங்களை உண்டுபண்ணும் என்பது அந்த டாக்டருக்கே தெரியவில்லை.

டீன் பெண்ணைப்போல் அலங்கரித்துக் கொண்டு மிடுக்காக லண்டன் மாநகரை வலம் வந்தார். அவ்வேளை பெண்களுக்கான மலசலகூடம் அவரின் கண்களில் தென்பட்டது. சிறிதும் தாமதியாது உள்ளே நுழைந்து விட்டார். மற்றப் பெண்களும் சந்தேகப்படவில்லை.

மலசலகூடத்தைவிட்டு வெளியே வந்தபோது, வீதியில் நின்ற பொலீஸ்காரருக்கு இவர்மீது சந்தேகம் ஏற்பட்டது பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு அபராதம் செலுத்திய பின்னரே அவர் விடுவிக்கப்பட்டார்.

மற்றொரு தடவை பெண்ணைப்போல உடையணிந்து கொண்டு ஆண்கள் கழிவறைக்குள் நுழைந்ததாக பொலீஸாரால் கழிவறைக்குள் வைத்தே மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இப்படி எத்தனையோ சோதனைகளுக்குள் சிக்குண்டு தவித்து விட்டார் டீன். ஆனாலும் அவர் சோர்வடையவில்லை. எப்படியும் பெண்ணாகிவிட வேண்டும் என்ற தனது முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறார்.

— எம். பேரின்பநாயகம்

## பெண்ணைப் பெற மன்னன் பட்டபாடு

1717—1774 காலத்தில் வாழ்ந்த துருக்கி சுல்தான முஸ்தபாவுக்கு 582 குழந்தைகள். அவ்வளவு பேரும் புதல்வர்கள்.

மருந்துக்கும் ஒரு மகள் கிடையாது.

பெண்ணுக்குத் தந்தையாகும் ஆசை சுல்தானை பிடித்து ஆட்டியது.

தனது அந்தப்புரத்தில் இருக்கும் ஆசைநாயகி யாராவது ஒரு பெண்ணைப் பெற்றுத் தந்தால் உடனே மகாராணியாக பிரகடனப்படுத்துவது என்று உறுதியளித்தார்.

ஆனால் ஒரு ஆசைநாயகியாவது பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துக்கொடுக்கவில்லை. பிறகும் பிறந்தவை எல்லாம் புதல்வர்களே.

### சீன இராணுவம் 'கிறீம்'கேட்கிறது

முகத்தை மென்மையாகவும் சுருக்கமின்றியும் வைத்திருப்பதற்கு கிறீம் வழங்கும்படி சீன இராணுவத்தின் ஒரு பிரிவினர், சீன அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

சீனாவில் லாவோசன் யுத்தமுனையின் இராணுவ வீரர்களே இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

''நாங்கள் இளைஞர்கள். கடுமையான உழைப்புக்காரணமாக முகங்களில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன. எனவே முகத்திற்கு பாவிக்கும் கிறீம் தேவை''— என்பதே அவர்கள் கூறும் காரணமாகும்.

## பௌத்த பெயரில் தமிழர் ஈடுபாடு

''சிராவஸ்தி'' ஒரு பௌத்த தலப் பெயர்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கொழும்பில் தங்கும் விடுதிக்கும் 'சிராவஸ்தி' என்றுதான் பெயர்.

ஆனால் தமிழகத்தில் இலங்கை எழுத்தாளர் ஒருவர் தமது அடையாறு இல்லத்திற்கும் 'சிராவஸ்தி' என்றே பெயர் வைத்துள்ளார்.

பௌத்த தலப் பெயரில் ஈடுபாடு கொண்ட அந்தத் தமிழ் எழுத்தாளர் யார்?

ஈழகேசரி ஆசிரியராக இருந்தவர். இலங்கை வானொலியில் தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராகப் பணிபுரிந்தவர்.

1958 இனக்கலவரத்தினால் மனம் வெதும்பி தமிழகத்தில் குடிபுகுந்தவர். அங்கு தமிழ் இலக்கிய உலகில் பிரகாசிப்பவர்.

அவர்தான் முதுபெரும் தமிழ் எழுத்தாளரான திரு. சோ. சிவபாதசுந்தரம்.

### அருகிவரும் அரணை; மறதி அதன் குணமா?

நமது கிராமங்களில் அரணை என்னும் உயிரினம் இருக்கிறது. அது ஓணான் இனத்தைச் சேர்ந்தது.

அரணை, மனிதர்களுக்கு எதுவித கெடுதியும செய்யாது. மனிதர்களுக்கு ஆபத்தான பூரான், தேள், வண்டினங்கள், பூச்சிகளையே அரணை உணவாகக் கொள்ளும்.

அரணை — வயல்,தோட்டம், குப்பைகளுக்குள் மறைந்து வாழும். மிகவும் பயந்த சுபாவம் உள்ளது.

இராக் காலங்களில் வெளிவராது. யார் கண்ணிலும் படாமல் உறங்கி விடும். பகலில் உணவு தேட வெளியே வரும். யாராவது மனிதர், நாய், பூனை தென்பட்டால் ஓடி ஒளித்து விடும்

இதைக் கவனித்து விட்டு நம்மவர்கள் சிலர் 'அரணை கடிக்கத்தான் வந்தது பின்னர் மறதியால் ஓடிப் போகிறது' என்று கூறுகின்றார்கள்.

இதனை வைத்தே 'அரணை கடித்தால் மரணம்' என்ற வாக்கியம் உருவாயிற்று.

அரணை கடித்து யாரும் இறந்ததாக இன்னும் செய்தி வெளியாகவில்லை.

அப்படி அரணை கடித்தாலோ, விருண்டினாலோ அந்த இடத்திற்கு சுண்ணாம்பு பூசி விட வேண்டும்.

அரணை இனம் அருகி வருகின்றது. அரணை, ஓணான், பல்லி, உடும்பு இனங்களை நாம் பாதுகாக்க வேண்டும். கூலி பெறாமல் மனிதருக்கு உதவும் ஜீவராசிகள் அல்லவா அவை.

— சி. பிறைகுடி

### படையை பெற்ற மன்னர்

முல்லா இஸ்மாயில் மொரோக்கோ மன்னராக 1646 — 1727 இல் இருந்தார்.

அவருக்கு 888 பிள்ளைகள். இவர்களில் 540 பேர் புதல்வர்கள்.

தனது இராணுவத்தில் தனிப்படை ஒன்றையே உருவாக்கினார். அந்தப் படைவீரர்கள் எவருமல்ல. மன்னரின் 540 புதல்வர்களே வெளியார் எவரும் அந்தப் படையில் இருக்க அனுமதிக்கப்படவில்லை.

## ஒரு வருடம் நடந்த சவ ஊர்வலம்

### சீனா நிகழ்த்திய சாதனை

ஒரு சவ ஊர்வலம் ஒரு வருடமாக நடந்தது.

சீனாவில் இராணுவ ஜெனரல் யிசுன் இறந்து விட்டார்.

அவரின் பிரேத ஊர்வலம் பீகிங்கில் இருந்து சின்கியாங் வரை இடம் பெற்றது.

இரண்டு நகரங்களுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்று தெரியுமா?

2,300 மைல்கள்.

பிரேத ஊர்வலம் 1912 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி ஆரம்பமாக [illegible] ஜூன் 1 ஆம் திகதி ஊர் [illegible] ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னரே, விவசாயிகள் படை ஒன்று ஊர்வலம் செல்லும் பாதை ஓர வயல்களில் நெற்செய்கையை மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வழியில் உணவு வசதிகள் செய்து கொடுக்கவே இந்த ஏற்பாடு.

### தனிப்பறவை புறா

பறவைகளில் நீரை உறிஞ்சிக் குடிப்பது புறா மட்டுமே.

[illegible] பறவை இனங்கள் எல்லாம், தலையை [illegible] தண்ணீரை விழுங்குகின்றன.

### கணவனுக்கே தண்டனை!

மனைவி சோரம் போனால் கணவன் சிறைக்குப் போகின்றான்.

இந்த ருசிகரமான நடைமுறை, சீனாவில் நாம் லேலி என்ற இன மக்களால் பின்பற்றப் பட்டு வருகின்றது.

இன்னொருவனுடன் சோரம் போனதற்கு மனைவி குற்றவாளியாகக் காணப்பட்டால், கணவன் சிறைக்கு அனுப்பப் படுவான்.

## இலக்கம் மூன்று அவருக்குப் பொருத்தம்

தோமஸ் ஜெபர்ஸன், அமெரிக்காவின் மூன்றாவது ஜனாதிபதி.

ஜெபர்ஸனுக்கும் 3 இலக்கத்திற்கும் வெகு பொருத்தம்

இவர் தோமஸ் குடும்பத்தில் 3வது தோமஸ்.

இவரின் பெற்றோர்களுக்கு இவர் 3ஆவது குழந்தை.

மூன்று பாடசாலைகளில் இவர் கல்வி கற்றார். அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை 33 ஆவது வயதில் அவர் எழுதினார்.

3ஆவது ஆளுனராக அவர் பதவி வகித்தார்.

பிரான்ஸில் அமெரிக்காவின் 3ஆவது தூதராக 3ஆண்டுகள் கடமை ஆற்றினார்.

அமைச்சரவையில் மூன்றாவது மந்திரியாகப் பணியாற்றினார்.

அமெரிக்கத் தத்துவக் கழகத்தின் 3வது தலைவராகப் பணியாற்றிய ஜெபர்ஸன், 1796இல் தலைமைப் பதவியை 3 வாக்குகளால் பறி கொடுத்தார்.

அரச போகம், பிரபுத்துவம், மதவெறி ஆகிய மூன்றையும் வெறுத்தார். கட்டடக்கலை, ஓவியம், சங்கீதம் ஆகிய மூன்றையும் ஜெபர்ஸன் விரும்பினார்.

### இறந்த பின்னும் நிம்மதி இல்லை

மடகாஸ்கர் தீவில் ''இமெரினா'' என்ற மாகாணத்தில் வாழும் பழங்குடி மக்கள் தமது இனந்தவர்கள் இறந்த பின்னும் நிம்மதியாக 'வாழ' விடுவது இல்லை.

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் புதைகுழியைத் தோண்டுவார்கள். பிரேதங்களை வெளியில் எடுப்பார்கள். புத்தாடையை அவற்றிற்கு அணிவித்து சில சடங்குகள் செய்வார்கள்.

இதன் பின்னர் மீண்டும் பழைய புதைகுழியிலே பிரேதங்களை அடக்கஞ் செய்வர். சில சமயங்களில் புதிய புதைகுழியிலும் அடக்கஞ் செய்வதுண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




### காலையிலே வெள்ளென நீ எழும்பு

காலையிலே வெள்ளென நீ எழும்பு – உன்
காரியத்தைப் பிரார்த்தனையில் தொடங்கு
வேலை செய்யுஞ் சூழலை நீ விரும்பு – உன்
வீரியத்தைக் காக்கினுடல் இரும்பு

சோம்பலினை ஊட்டி வளர்க்காதே – உடற்
சொகுசுகளில் உன்னையழிக்காதே
வீம்புகளைத் தேடிவளர்க்காதே – வெளி
வேஷமதில் உன்னை மறக்காதே

பெற்றவரின் சொல்லைமறுக்காதே – உன்னைப்
பேணி வளர்ப்பவரைச் சினக்காதே
முற்றத் துறந்தவரை முனியாதே – தன்
முனைப்புக் கிடங் கொடுத்தல் தவறாமே.

ஏழை எளியவருக் கிரங்கு – அவர்
இதயங் குளிரும் பணியில் இறங்கு
ஊழும் உனக்கு முன்னே திரும்பு – இதை
உணர்ந்து முயற்சியினில் ஊன்று.

— அமரர் பெ. பொ. சிவசேகரனார் —
பெருந்தலைவர், திருகோணமலை கம்பன் கழகம்.

### மெய்வருந்தக் கூலி தரும்; கடவுளும் கருணை புரிவார்!

ஒரு குடியானவன் இரண்டு மாடுகள் பூட்டிய வண்டியில் நிறைய சுமை ஏற்றிக் கொண்டு காட்டுவழியால் செல்லலாயினான். முதல் நாள் மழை பெய்திருந்ததால் வழிநெடுக சேறும் சகதியுமாக இருந்தது. ஓரிடத்தில் வந்ததும் வண்டி சேற்றில் புதைத்து விட்டது. குடியானவன் மாட்டை அடித்தான் — மாட்டின் வாலை முறுக்கினான். இன்னும் என்ன வெல்லாமோ செய்தான். ஆனால் மாடுகளால் வண்டியை இழுக்க முடியவில்லை. இடமோ நடுக்காடு. குடியானவனுக்குப் பயம் வந்து விட்டது. ஆசனத் தட்டிலிருந்து குதித்து, இரு கரங்களையும் சிரமேல்குவித்து ''ஸ்வாமி கடவுளே!— நானென்ன செய்வேன். இப்படியே நின்றால் கொடிய மிருகங்கள் என்னைக் கொன்று விடுமே' என்று வாய் விட்டு அழுதான்.

சுவாமிக்கு மனம்இளகிவிட்டது. அவன் முன் தோன்றி, ''அப்பா, நீ மாடுகளை மாத்திரம் அடித்தாய். பின்பு என்னை அழைத்தாய். ஆனால் உன் தோளினைக் கொடுத்துத் தள்ளிப் பார்க்கவில்லையே. நீ உன் பலம் முழுவதையும் சேர்த்து சக்கரத்தை உந்தித் தள்ளு— நீ உன் உலை வருத்தி, முயற்சித்தால் நானும் உனக்கு உதவி செய்வேன்,, என்று கூறி மறைந்தார்.

குடியானவனும் தனது தோள்களினால் வண்டியைக் கிளப்பி மாடுகளை உரப்பி ஓட்டினான். இறைவனும் அவனுக்குச கருணை கூர்ந்தார்.

வண்டி சேற்றிலிருந்து கிளம்பியது. குடியானவனும் சுகமாக வீடுவந்து சேர்ந்தான்.

உடலை வருத்த உழைப்பவனுக்குத்தான் இறைவன் அருள் செய்வானென்பதைக் காட்டுவதற்கு கர்ணபரம்பரையாகச் சொல்லப்படும் கதைகளில் இதுவும் ஒன்று.

# பெண்கள் மேன்மை மேம்பட உலகமெங்கும் உரிமைக்குரல்

## மாநாடுகளில் மாதருக்காக சிறப்புத் திட்டங்கள்

ஐக்கிய நாட்டுப் பிரகடனப்படி, 'பெண்கள் பத்தாண்டு' 1985 ஆம் ஆண்டுடன் முடிவடைந்தது.

1975இல் ஐக்கிய நாட்டுச் சபையின் தீர்மானத்தையொட்டி, மெக்ஸிக்கோ நகரத்தில் உலகப் பெண்கள் ஆண்டு மாநாட்டுத் தொடரில், உலக அரங்கில் பெண்களுக்கு உள்ள பல வேறுபாடுகள், தாழ்வு நிலை, இன்னல்கள் ஆகியவற்றை விலக்க உலக அளவில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு 1980 இல் டென்மார்க் தேசத்தின் கோபன்ஹேகன் நகரில் மற்றோர் உலகப் பெண்கள் மாநாடு கூட்டினார்கள்.

அப்போது உடனடி நடவடிக்கை எடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்த இரண்டு உலக மாநாடுகளும் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. காரணம், இந்த மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்ட பல கருத்துகள் பல்வேறு அரசு நிர்வாகங்களையும், மக்களையும், பெண்கள் சம அந்தஸ்து பெறுவதன் முக்கியத்துவத்தையும் அவசர நிலையையும் வலியுறுத்தி அவர்கள் கவனத்தை ஈர்த்ததேயாகும்.

1985 ஆம் ஆண்டு நைரோபியில் நடந்த உலக மகளிர் மாநாடு மேலும் சிறப்புப் பெற்றது.

சென்ற பத்தாண்டுகளில் உலகப்பெண்களின் நிலை, ஏற்றத் தாழ்வுகள், சாதனைகள், குறைபாடுகள், இனி நாம் செய்ய வேண்டிய காரியங்கள் ஆகியவற்றை மறுபரிசிலனை செய்ய இந்த மாநாடு உதவியது.

காலம் சென்ற பாரதப் பிரதமர் இந்திரா காந்தி பெண்களின் வளர்ச்சியில் மிக அக்கறை கொண்டதுடன் மாபெரும் நாட்டின் பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிக்க கூடிய சிறந்த தேசத் தலைவியாகவும் விளங்கினார். மனிதாபிமானத்துடன் மக்களின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கக் கடைசி மூச்சுவரை பாடுபட்டார்.

> கலைமகள் தீபாவளி சிறப்பு மலரில் சரோஜினி வரதப்பன் எழுதிய கட்டுரையின் முக்கிய அம்சங்கள் இங்கே பிரசுரமாகின்றன.

அவர்கள் உலகப் பெண்கள் மாநாட்டுக்கு அனுப்பிய செய்தி:–

''1975 இல் பெண்களின் சமநிலை வளர்ச்சி, நமது பொதுவளர்ச்சியைச் சேர்ந்தது. அரசு மட்டும் இவற்றைச் சந்திக்க முடியாது.

பெண்களும் தங்களது உரிமைகளையும் உணர வேண்டும். பெண்கள் விடுதலை மிக முக்கியம். அவசரமானதும் கூட.

இன்று தேசம் வேகமாக ஆன்மீகத்துறையிலும் அறிவு வளர்ச்சியிலும் பொருளாதாரத்திலும் மேம்பாடடைய வேண்டுமாயின் பெண்களின் விடுதலை மிகவும் முக்கியம்'' என்று கூறியுள்ளார்.

நைரோபி மாநாட்டுக்கு முன் இந்தியா கூட்டுச்சேரா மநாட்டை டில்லியில் கூட்டியது. அதில் பல கருத்துக்கள் தோன்றி, வளர்ச்சி என்பது ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய அடிப்படை உரிமை என்பதை நினைவு படுத்தி, இதில் பெண்கள் பங்கு ஒரு பெரும்பலம் என்பதை அங்கீகரிக்கக் கோரியது.

தேசியத் திட்டங்களில் பெண்களின் வளர்ச்சி எல்லாத்துறைகளிலும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதையும் அது வலியுறுத்தியது.

பெண்கள், தேசப்பணியில் தீவிரமாகப் பங்குபெற அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரம், அடிப்படைக் கல்வி, விஞ்ஞானஅறிவு, குடும்ப நலத்தில் அவர்கள் சுயமாகத் தீர்மானமெடுக்கும் சுதந்திரம், சுகாதாரம் போன்றவற்றில் முழுப்பங்கு ஆகியவை வழங்கப்படுதல் அவசியம்.

விவாகம், விவாகரத்து குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வது, சொத்துரிமை போன்ற விஷயங்களில் பெண்களுக்குப் பல சலுகைகள் சட்டரூபமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் சட்டத்தின் மூலமாக மட்டும் பெண்கள் முழுப்பலனை அடைய முடியாது. மக்களிடையே மனமாற்றம் தேவை. அதற்கேற்ற சமூக சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். மக்களின் கருததுக்கள் மாற வேண்டும் அப்பொழுது தான் பெண்களின் அந்தஸ்து உயரமுடியும். பெண்களிடையே விழிப்புணர்ச்சி உண்டு பண்ண வேணடும். அதன் பிறகே சட்டத்தைச் சரிவர அமுலாக்கமுடியும்.

ஆனால் சற்று ஊன்றிப் பாரதேோமேயானால் உடல் முன்னேற்றத் திட்டங்களுக்கு அடிப்படைத் தேவை கல்வி. அந்தக் கல்வி இல்லாமல் பெரும்பாலான பெண்கள் இருப்பது வேதனை தருகிறது.

சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகள் கழிந்தும் பெண்களில் கல்வி அறிவு பெற்றவர்கள் மிகக் குறைவாக இருக்கின்றனர். அதிலும் கிராமப்புறங்களில் பெரும்பான்மைப் பெண்கள் கைநாட்டுப் பேர்வழிகள் (பெருவிரல் அடையாளம் வைப்பவர்கள்) என்றால் பெண்கள் அந்தஸ்து எவ்வாறு உயரமுடியும்?

–நன்றி கலைமகள்–




# சுவைத்துப் பாருங்கள்

## சத்தும் சுவையுமுள்ள மரவள்ளி உணவுகள்

திருமதி வசுமதி முத்துக்குமாரசாமி பி. ஏ.

மரவள்ளிக்கிழங்கு மலிந்து காணப்படும் காலமிது. அதனை எவ்வகையில் சமைக்கலாம் என மலைக்க வேண்டாம். சுவைமிகு உணவுகள் தயாரித்துப் பரிமாறிட இதோ சில வழிகள்.

**மரவள்ளி வடை:-**

தேவையான பொருள்கள்:
அரைக் கிலோ மரவள்ளிக்கிழங்கு
50 கிறும் வெங்காயம்
05 பச்சை மிளசாய்
50 கிறும் கோதுமை மா
பொரிப்பதற்கு எண்ணெய்
1 மே. கரண்டி மிளகாய்த்தூள்
2 தே. கரண்டி பெருஞ்சிரகம்
உப்பு

**செய்முறை:**

முதலில் மரவள்ளிக்கிழங்கை தோலைச்சீவி நன்கு கழுவியபின் கிழங்கு உரோஞ்சியில் உரோஞ்சிக் கொள்ளவம். பின்பு அதனை நன்கு பிழிந்து பால் நீக்கி எடுக்கவும். பிழிந்த கிழங்கிற்கு சிறுதுண்டுகளாக்கப்பட்ட வெங்காயம் மிளசாய் என்பவற்றுடன் பெருஞ்சிரகம், உப்பு, மிளகாய்த்தூள் என்பன சேர்த்து. பசைத்தன்மையாகப் பிடிப்பதற்கு அளவான மாவை இட்டு சிறு உருண்டைகளாக்கிய பின் தட்டிப் பொரிசதெடுக்சவும்.

**மரவள்ளி றேல்ஸ்:**

சேவையான பொருள்கள்:
அரைக்கிலோ மரவள்ளிக்கிழங்கு
50 கிறும் கோதுமை மா
உப்பு

**உள்ளீடு:**

250 கிறும் உருளைக்கிழங்கு
100 கிறும் லீசஸ்
100 கிறும் கரட்
50 கிறும் வெங்காயம்
05 பச்சை மிளகாய், மிளகுதூள், உப்பு.

**செய்முறை:**

முதலில் உருளைக்கிழங்கை அவித்து மற்றையவற்றை சிறு துண்டுகளாக அரிந்து வதக்கி எடுக்கவும்: பின்பு கிழங்குடன் சேர்த்து உப்பும்; மிளகுதூளும் இட்டு மசித்துக் கொள்ளவும்.

பின்பு மரவள்ளிக்கிழங்கைத் தோலை நீக்கிக் சழுவி உரோஞ்சியில் உரோஞ்சிய பின்பு பாலைப் பிழிந்து எடுக்கவும். கிழங்கிற்கு உப்பும், கோதுமை மாவும், விரும்பின் சிறிது உறைப்பும் சேர்த்து சிறு உருண்டைகளாக்கிய பின் நன்கு மெல்லிய வட்டங்களாகத் தட்டிக் கொள்ளவும். பின்பு தயாரிக்கப்பட்ட கறியில் நடுவில் வைத்து விரும்பிய வடிவமாக மடித்து எண்ணெய்யில் பொரித்துக் கொள்ளவும். அல்லது பேக் செய்து கொள்ளவும்.

# வால்வெள்ளி வீழ்வதனல் பூமியிலும் அழிவு ஏற்படும் ஆபத்துண்டு

## நவீன விஞ்ஞானத்தில் அதன் பாதையையே மாற்ற வாய்ப்பு

காலத்திற்குக் காலம் கண்ணைக் கவரும் காட்சிகள் விண்ணில் தோன்றி மண்ணிலுள்ளோரை வியப்பிலாழ்த்தி வந்துள்ளன.

வால்வெள்ளிகள் தோன்றுவதும் ''வெள்ளி விழ்தல்'' போன்ற காட்சிகளும் அடிக்கடி விண்ணில் தோன்றுவதுண்டு. ஆனால் ஒரு சிலவே மனிதனின் ஆராய்ச்சியை ஈர்ப்பனவாக அமைகின்றன. அத்தகையதொரு சம்பவமே இந்த ஆண்டு நடைபெறுகின்றது.

இவ்வால் வெள்ளிகளும் கோள்களைப் போலவே சூரியனை வலம் வருகின்றன. கோள்கள் வட்டமான பாதையிலும், இவ்வுடுகள் நீள்வட்டப் பாதையிலும் வலம் வருகின்றன.

மேலும் வெவ்வேறு கால இடைவெளிகளில் இவற்றின் சுற்றுக்கள் பூரணமாகின்றன. இச் சுற்றுக்களின்போது அவை பூமியை அண்மிக்கும் காலங்களில பூமியிலுள்ளோருக்குத் தோன்றுகின்றன. இப்படியானதொரு சம்பவமே இந்த ஆண்டு நிகழ்கிறது.

இதவருடம் தோன்றி இருக்கும் இவ் வால்வெள்ளி ''ஹேலீஸ் வால்வெள்ளி'' என அழைக்கப்படுகின்றது. முதன் முதலில் இதன் தோற்றத்தை வானியலாளர் எட்மண்ட் ஹேலீ என்னும் ஆங்கிலேயர் 1682ம் ஆண்டு கண்டுற்றார். இவ்வெள்ளி மீண்டும் 1758ம் ஆண்டு தோன்றுமென அறுதியிட்டுக் கூறியிருந்தார். துரதிர்ஷ்டவசமாக இவர் 1742ம் ஆண்டு இறக்க நேரிட்டது. எனினும் இவர் கூற்றுப்படி 1758ல் இவ்வெள்ளி மீண்டும் தோன்றியது இதன் காரணமாக இவ் வானியலாளரின் பெயரால் இவ் வெள்ளி அழைக்கப்பட்டு வருகின்றது.

இவ் வால்வெள்ளி ஒரு முறை சூரியனைச் சுற்றுவதற்கு 76 வருடங்கள் எடுப்பதனல் இம்முறை காணத் தவறுபவர், வாழ்நாளில் தவறுபவராவர். ஒரு முறைஇது சுற்றிவர 9.6 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தை அது கடக்க வேண்டியிருக்கின்றது.

வாழ்வில் ஏற்படும் அரிய நிகழ்ச்சியாக இருப்பதனல்மேற்கு நாடுகளில் இதனை வரவேற்கபெரும் ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. ஒரு பக்கம் உலகம் முழுவதுமுள்ள விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கு ஆயத்தங்கள் செய்துவர, மறுபக்கம் இவ்வரிய நிகழ்ச்சியைக் கொண்டாடவும் மக்கள் தயாராகிவருகின்றனர்.

சில நாடுகளில் இதனை விழாவாகவும் மகிழ்ச்சி ததும்பும் கொண்டாட்டத்துக்குரிய நிகழ்ச்சியாகவும் வரவேற்கத் தயாராகின்றனர்.

## ஹேலீஸ் பற்றி ஒரு கண்ணோட்டம்

உடுபிடவைகள், கோப்பைகள், பீங்கான்கள் போன்றவற்றிலும் ''ஹேலீஸ் வருகின்றது'' ''ஹேலீஸ் வருடம் 1986'' போன்ற வாசகங்களும் பொறிக்கப்பட்டு விற்பனையாகின்றன.

வால்வெள்ளிகள் சூரியனைச் சுற்றி நீள்வட்டத்தில் வலம் வருகின்றன. ஆனால் இவற்றின் காலங்கள் வேறுபடுகின்றன.

வால்வெள்ளிகள் சூரியனை அண்மிக்கும் போது பூமியை அண்டி வருமாயின் பூமியிலுள்ளோருக்குக் காட்சிப் பொருளாக அமைகின்றன.

வால்வெள்ளியென்றால் என்ன?

வால்வெள்ளியென்பது சடத்துவ வாயுக்களையும் ஆவியாகா (NON–VOLATILE) திண்மங்களையும் உள்ளடக்கிய கோளமாகும். இவை சூரியனை அண்மிக்கும் போது சில வாயுக்களும் திண்மங்களும் ஆவி நிலையை அடைந்து வெளியேறுகின்றன. இதன் காரணமாக கோளத்தைச்சுற்றி வாயுமண்டலமொன்று உருவாகின்றது. இவ் வாயுமண்டலத்தின் மையமே, வால்வெள்ளியின் தலையாகவும் அமைகின்றது.

இக் கோளமானது சூரியனை மிக அண்மிக்கும் காலத்தில் ஆவி நிலையிலுள்ள வாயுக்கள் சூரியனின் கதிர் வீசல் மூலம் வெளிநோக்கி தள்ளப்படுகின்றன. இதன் காரணமாக அடர்த்தியாக வெளியேறும் வாயுக்கள், அதனது வாலாகத் தோன்றுகின்றன. சூரியனின் ஒளி காரணமாக தலைப்பகுதி மிகவும் பிரகாசமாகவும், வால் பகுதி விரிந்த சுற்றையாகவும் தோற்றமளிக்கின்றன. [illegible]

இச் சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். கிரேக்க மொழியில், கொமேற் என்ற பதம் நீண்ட கேசத்தைக் குறிப்பதாகும்.

'ஹேலீஸ்' வால்வெள்ளியானது இந்த ஜனவரியளவில் சாதாரண கண்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

பெப்ரவரி 9ம் திகதியளவில் சூரியனுக்கண்மையில் வருவதால்; அன்றைய தினம் மிகவும் பிரகாசமாகக் காட்சி அளிக்கும்.

ஆனால் அது 1986 ஏப்ரல் மத்தியில்தான் பூமிக்கண்மையில் வருகின்றது. பூமியை அண்மிக்கும் காலங்களில்; வானியலாளர்கள் பல வித ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

இவ் வால்வெள்ளி கடந்த முறை 1910ல் தோன்றியபோது இருந்த நிலையிலும் பார்க்க விஞ்ஞானம் பலவழிகளிலும் முன்னேற்றமடைந்திருக்கிறது.

இதனால் இம்முறை இந்த வால்வெள்ளி பூமியைநெருங்கும்போது மேலும் பல அரிய உண்மைகள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வால் வெள்ளிகள் காலத்திற்குக்காலம் குறிப்பிட்ட இடைவெளிகளில் தோன்றினாலும்; அவை நாளடைவில் தமது பிரகாசத்தைஇழப்பதற்கும்; சில வேளைகளில் முற்றாக அழிந்து போவதற்கும் சாத்தியங்கள் இருக்கின்றன.

பூமிக்கு அண்மையில், ஒவ்வொரு தடவையும் [illegible] வாயுக்கள் சூரியனின் (7-ம் பக்கம் பார்க்க)

வண்ணை. சே. சிவராஜா
பி எஸ்ஸி, டிப். இன். எட்

# யாழ். மாவட்டத்தில் கல்வி பின்னடையும் நிலையில்!

## அதிர்ச்சி தரும் சில புள்ளி விவரங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டாயக் கல்வி வயதுடைய மாணவர்களில் அறுபத்தைந்து வீதமானோரே பாடசாலை செல்கின்றார்கள். ஏனைய முப்பத்தைந்து வீதமானோர் பாடசாலை சென்று பாடம் பயில்வதில்லை.

ஐந்து வயது தொடக்கம் பதின்மூன்று வயது வரையிலான பருவம் சிறுவர்கள் கட்டாயக் கல்வி பெறவேண்டிய காலம். இப்பருவத்திலே இத்தனை வீதமானோர் ஆரம்பக் கல்வி பெறாதிருப்பது அதிர்ச்சி தரும்செய்தி.

இத்திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளவர் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை.

இந்த நிலை தொடருமானால் வருங்காலத்தில் எமது சமுதாயத்தில் கணிசமான பங்கினர் எழுத்தறிவு இல்லாதவர்கள் என்ற நிலை உருவாகும். பல்வேறு துறைகளிலும் நாம் விடிவை நாடி நிற்கும் காலகட்டதத்தில் இப்படியும் ஒரு நிலை உருவாகலாமா?

''இவ்வாறு பாடசாலையில் அனுமதி பெறாத மாணவர் தொகை கிராமப்புறத்திலும் பார்க்க நகர்ப்புறத்தில் அதிகம்: கட்டாயக் கல்வி பயில வேண்டிய வயது மாணவர்களைப் பொறுத்தளவில் புங்குடுதீவில் 98.3 வீதத்தினர் பாடசாலையில் சேர்ந்துள்ளனர். மண்டைதீவில் 98 வீதத்தினர் கல்வி பெறுகிறார்கள். இவை பின் தங்கிய பகுதியில் நிலவும் நிலை.

ஆனால் நகர்ப்புறங்களைப் பார்த்தால் நிலைமை மோசமாக உள்ளது. நல்லூரில் 77வீதத்தினரும், வண்ணார்பண்ணையில் 68 வீதத்தினரும், புலோலியில் 69 வீதத்தினரும் மட்டுமே பாடசாலை செல்கிறார்கள் ''

இவ்வாறு இன்றுள்ள நிலையை கவலை மிக்க தொனியில் விளக்கினார் கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி.

யாழ் மாவட்டம் முகம் கொடுக்கும் முக்கிய கல்விப் பிரச்சினை இது. உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளத் தவறின் இது ஒரு பாரிய சமூக பிரச்சினையாக உருவெடுக்கும். கல்வித் துறையினர் மட்டுமல்லாது ஏனைய துறையினரும் செயலில் இறங்க வேண்டும்.

### வகுப்பேற்றம் பெறுதவர்கள்

யாழ் கல்வி உலகின் அடுத்த பிரச்சினை, இன்று பாடசாலைகளில் வகுப்பேற்றம் பெற முடியாத மாணவர்கள். இத்தொகையினர் ஏறத்தாழ பன்னீராயிரம் மாணவர்கள் எனக் கணிக்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டில் பன்னீராயிரம் மாணவரும், 85 இல் ஒன்பதினாயிரம் மாணவரும் வகுப்பேற்றம் பெறவில்லை. நாலாம், ஐந்தாம் ஆண்டு வகுப்புகளிலேயே இவ்வாறு வகுப்பேற்றம் பெறுதவர்கள் அதிகம் என்றும் தெரிய வருகிறது.

மாணவர்கள் வகுப்பேற்றப்படவில்லை என்றால், அவர்கள் படிப்பில் குறைவு என்பதே காரணமாக இருக்கலாம். கல்வித் தரத்தில் அவர்கள் உயரும் வரை வகுப்பேற்றம் நல்லதல்ல.

இருப்பினும் இவ்வளவு தொகையினர் வகுப்பேற்றம் பெறமுடியாது இருப்பார்களானால், அது திருப்தியான நிலைப்பாடு அல்ல. பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள், போதனு முறைகள் ஆகியவை தொடர்பான மீளாய்வும் அவசியமாகும்.

பாடசாலைகளில் வகுப்பேற்றம் பெறுத மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது நடப்பாண்டு முயற்சியாக யாழ்கல்விப் பணியகம் திட்டமிட்டுள்ளது வரவேற்கத்தக்கது

இவ்வாறு வகுப்பேற்றம் பெறுத மாணவர்களில் கணிசமான தொகையினர் பாடசாலைப் படிப்பினைக் கைவிடுவதும் உண்டு. இது சமூகத்துக்கு நன்மை பயக்குமா?

படிப்பில் குறைவான மாணவர்களை தங்கு தடையின்றி அடுத்த வகுப்புகளுக்கு வகுப்பேற்றஞ் செய்வதால் இப் பிரச்சினை தீராது. அது நல்ல அணுகு முறையும் அன்று.

மாறுக, இம்மாணவர்களின் குறைபாட்டுக்கு உரிய காரணிகளை இனங்கண்டு, படிப்பில் குறைவாக உள்ள அலகுகளை விசேட படிப்பித்தல் முறைகளைக் கையாண்டு போதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். வீட்டில் பெற்றோரும் தமது குழந்தைகள் கல்வியில் முன்னேற வேண்டிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொலிவூட் நடிகையின் இரண்டு நிபந்தனைகள்

ஹொலிவூட் படவுலகில் கொடிகட்டிப் பறந்தவர் மர்லின் மன்ரோ. அவர் கடைசியாக நடித்த படம் ''சம் திங் ஹாஸ் காட் டு கிங்''

இப்படம் அரைவாசி வளரும் முன்பே அவர் தற்கொலை செய்து கொண்டு விட்டார்.

அவர் நடித்த பாத்திரத்திற்கு ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய கவர்ச்சி மிகு நடிகையை தேர்ந்து எடுப்பதில் தயாரிப்பாளர் தவித்துப் போனார்.

ஒருவாறு டோரிஸ்டே தெரிவானார். ஆனால் அவர் நடிப்பதற்கு இரண்டு நிபந்தனைகளை விதித்தார்.

ஒன்று, அரைவாசியில் படம் நின்று போய் விட்டதால், ராசி இல்லாத அப்படத்தின் பெயரை மாற்ற வேண்டும். இரண்டு, நிர்வாணக் காட்சிகளை எடுப்பதில்லை என உறுதியளிக்க வேண்டும் என்பதுவே.

உடனே தயாரிப்பாளர் படத்தின் பெயரை ''மூவ் ஓவர் டார்லிங்'' என்று மாற்றி அரம்பத்தில் இருந்து எடுத்தார்,

ஹொலிவூட் நடிகையிடமும் இப்படியான கவர்ச்சிக் கட்டுப்பாடு இருந்திருக்கிறது என்றால் வியப்பாக இல்லையா?

-'' பிஸ்கின் ''-

## கமலின் சிறப்பு

கமலுக்கு மொழிப் பிரச்சினையே ஏற்பட்டதில்லை. தமிழ், தெலுங்கு கன்னடம், ஹிந்தி, மலையாளம், ஆங்கிலம்– எல்லாம் இவருக்கு ஒன்று தான்.

கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது, குறித்த நேரத்தில் படப்பிடிப்பிற்கு வருவது தெரியாதவற்றை ஒப்புக் கொள்வது இவரின் விசேஷ குணங்களாகும்.

இதைவிட கமல் புதுக் கவிதை எழுதும் ஒரு கவிஞனும் கூட.

# அபிமான நட்சத்திரங்களின் அங்க அதிர்ஷ்டங்கள்

வெள்ளித் திரையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் அங்க இலட்சணங்களைக் கொண்டு, அவர்களின் அதிர்ஷ்டங்களைப் பற்றி கூறியுள்ளார் கைரேகை கலையரசி சிவசுந்தரி.

உங்கள் அபிமான நட்சத்திரங்களின் அதிர்ஷ்டம் உங்களுக்கும் உண்டா? ஒப்பிட்டுப் பாருங்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்: தாமரைமலர் போன்ற சிவந்த கண்களும் கழுத்தில் ஐந்து கோடுகளும், மார்பில் மூன்று கோடுகளும் இருப்பது இவரின் அதிர்ஷ்டமாகும்.

கமல்: இவரது கண்களே இவரது அதிர்ஷ்ட அம்சம். ஒளிவீசும் இவரது கண்களே இவரின் அறிவாற்றலையும், ஆண்மையையும் வெளிப்படுத்துகிறது.

கே.ஆர். விஜயா: இவரது கண்களிலுள்ள கருவிழிகள் மேலே செருகினாற்போல் இருக்கிறது. இப்படி கண் அமைவது மிகவும் அதிர்ஷ்டம்.

பாக்கியராஜ்: கூரான மூக்கும் சிரிக்கும் போது இலேசாகத் தெரியும் முன் பற்களும் இவரது அதிர்ஷ்டத்தின் மர்மமாகும்.

மோகன்: இவரது அழகிய கண்களும், பற்களுமே அதிர்ஷ்டத்திற்குக் காரணம். சிரிக்கும் போது தெரியும் இவரின் பல்லழகு பெண்களைக் கவர்ந்து விடுமாம்.

அனுராதா: அங்கம் முழுவதும் காட்டி ஆடி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினாலும் இவருக்கு அதிர்ஷ்ட உறுப்பு செவ்விதழ்கள் மட்டும் தான். கவர்ச்சியும் இவரது செவ்விதழ்களில் தான்!

அம்பிகா: உருண்டையான மூக்கும் உதடுகளும் இவருக்கு அதிர்ஷ்ட அம்சங்கள். இவை இவர் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவதற்குக் காரணமாக அமைகிறது.

பிரபு: 'கிளாஸ்கோ' பேபியைப் போல் இருக்கும் இவருக்கு கன்னக் குழி மிகப்பெரிய அதிர்ஷ்டமாம். தந்தையைப் போல் (சிவாஜி) இவருக்கும் கழுத்தில் மூன்று கோடுகளும், மார்பில் மூன்று கோடுகளும் இருப்பது அதிர்ஷ்டம்.

சிவகுமார்: இவரது பற்களும் காதுமடல்களும் கழுத்தில் உள்ள கோடுகளும் அதிர்ஷ்டத்தைத் தேடித்தரும் அங்கங்களாகின்றன.

கார்த்திக்: தந்தையைப் போல் (முத்துராமன்) கூரான மூக்கும், கழுத்திலும் கண்டத்துக்குக்கீழே இருக்கும் மூன்று கோடுகளும் இவரது அதிர்ஷ்ட அங்கங்கள்.

ஜெயமாலினி: இவரது உடம்பில் உள்ள அத்தனை அங்கங்களுமே அதிர்ஷ்டத்தின் அடையாளமாகும். உயரம், நிறம், முகஅழகு, உடலழகு, உடம்பில் எங்கெங்கு வளைவு, நெளிவு கூடிக் குறைய வேண்டுமோ, அப்படியே அமைந்திருப்பது இவரது விசேஷ அம்சமாகும்.

**தயாரிப்பு: பேரின்பம்**

## வெள்ளித் திரை

## ஸ்ரீதேவி கூறுகிறார்

ஸ்ரீதேவி விரைவில் திருமணம் செய்யப்போகிறார் என்று சினிமா வட்டாரங்களில் பரபரப்பாக பேச்சடிபடுகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாப்போல் ஸ்ரீதேவி இப்படிக் கூறுகிறார்:

''எனக்குத் திருமணம் என்றால் ஊர் அறிய எல்லோருக்கும் அறிவித்துவிட்டே செய்வேன். இரகசியமாகத் திருமணம் செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. ஆகவே எவரும் பரபரப்படையத் தேவையில்லை.''



## வடமராட்சியின் வளம்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்பாடு அத்தியாவசியமானதாகும்.

வடமராட்சியின் சிறப்பான கொடையானமூலை சாலிகளையும், இயற்கையாக கிடைக்கப் பெற்ற மூலவளங்களையும் ஒன்றிணைத்து சிறந்த திட்டங்களைத் தீட்டவேண்டும். அதன் மூலம் வடமராட்சி பகுதியைச் செல்வம் கொழிக்கும் ஓர் பிரதேசமாக மாற்றமடையச் செய்யலாம் என்பது உறுதி.

வடமராட்சியின் இயற்கையான வளங்கள் பற்றி இந்தக் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

அடுத்த வாரம் ''வடமராட்சியின்பனை வளம்'' பற்றி விளக்கமாய் பார்க்கலாம்.

## வால் வெள்ளி....

(6ஆம்பச்கத்தொடர்ச்சி)

வெப்பநிலை காரணமாக, ஆவியாகி வெளியேறி விடுவதனால், காலகதியில் இவற்றின் திணிவும்; உள்ளடக்கமும் மறுதலடைந்து நாளடைவில் முற்றாக அழிந்து போக வாய்ப்புண்டு ஆனால் இப்படி நிகழ்வதற்கு பல கோடி ஆண்டுகள் தேவைப்படலாம்.

வால் வெள்ளியானது பூமியை அண்மிக்கும் போது; ஈர்ப்பின் காரணமாக, பூமியுடன் மோதும் வாய்ப்புக்கள் உண்டா என்னும் சந்தேகம் எழுவது இயற்கையே. இதற்கான விடை ''ஆம்' என்பதேயாகும். ஆனால்!.........

பூமியானது வால் வெள்ளியொன்றின் வால்ப்பகுதியினூடாகப் பல தடவைகள் சென்றுள்ளது. இருந்த போதும் பாரிய விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை. காரணம்?

வால் வெள்ளியின் வால்ப்பகுதியில் அடர்த்தி குறைந்த வாயுக்கள் காணப்படுவதனால்; இவற்றினூடே பூமியானது செல்லும்போது பெரிய பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. இது புகைக்கும் மோட்டார் வண்டியொன்றிலிருந்துவெளியேறும் புகையினால் ஏற்படும் பாதிப்பைப் போன்றதேயாகும். வால்ப்பகுயினூடாகச் செல்வதிலும் பார்க்க; வால்வெள்ளியின் தலைப்பகுதியானது, பூமியுடன் நேரடியாக மோதுமாயின் பாரதூரமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு. ஆனால்; இவ்வகையான சந்தர்ப்பங்கள் பல கோடி வருடங்களுக்கு ஒரு முறையே ஏற்படும்.

இப்படி ஏற்படும் பட்சத்தில் பெருமளவு சக்திகள் உருவாவதோடு கோள்கள் — பூமி போன்றவை — பிளவு படவும் கூடும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தின் போதே தான் சந்திரனும் தோன்றியிருக்கக் கூடுமென்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

எவ்வாறு இருப்பினும் வருங்காலத்தில், விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, ஏவுகணைகளை இவ் வால்வெள்ளிகளின் பாதையில் செலுத்தி இவற்றின் பாதையை மாறுதலடையச் செய்யலாம் எனவே வருங்காலச் சமுதாயம் இவ்வகையான ஆபத்துக்கள் ஏற்படின் அதிலிருந்து தப்பிக் கொள்ள முடியும்.

## திரை உலகில்

இந்திப்படவுலகில் நான் அதிகமாக மதிக்கும் நபர் அமிதாப்பச்சன் என்று ரஜனிகாந்த் அடிக்கடி பெருமையாகக் கூறிக் கொள்கிறார்.

*

''நன்றி''யில் நடித்த பிரௌனி என்ற நாயின் கால்ஷீட் கிடைக்காமல் சில தயாரிப்பாளர்கள் தவிக்கும் அளவுக்கு அது பம்பாயில் ''பிஸி''யாகி விட்டது!

*

''நினைத்தாலே இனிக்கும்'' படத்தில் நடித்தேன்; ஆனால் படத்தின் நீளம் அதிகமாகி இருந்ததால் நான் நடித்த காட்சிகள் நீக்கப்பட்டு விட்டன. இப்படிக் கவலையோடுகூறுபவர் வனிதா.

*

ஊர்வசி நடிக்கும் படங்களில் சாந்தி என்ற பெயரைத் தவிர்க்கிறார். சாந்தி என்ற பெயரில் அவர் நடித்த படங்கள் வெற்றி அடையாததே இதற்குக் காரணமாம்.

*

நடிகை அனுராதா தனது பிறந்தநாளைப் புதுமையான முறையில் கொண்டாடினார். சென்னையிலுள்ள கண்பார்வை இழந்தோர் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவளித்து, அவரும் அவர்களுடன் உணவருந்தினார்.

*

## வியாழ மாற்றம்...

ரியம் செய்வர்.

### கன்னி

இந்த ராசிக்காரர்களுக்கு நிதானம் இருக்காது. உடம்பில் சுகவீனம் வரும். சரீர சுகம் குறைவு. கன்னியர்களாயின் விவாகம் தாமதப்படும். நகைகள் அடகு பிடித்தல், விற்றல் என்பன செய்யக்கூடாது. வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்க்கவும் தெய்வவழிபாடு நன்மை தரும்.

### துலாம்

இந்த ராசிக்காரர்களுக்கு பொருள் வரவு, காரியசித்தி, நல்லலாபம் என்பன உண்டு. இல்லச் சிறப்பு, மகிழ்ச்சி, வாத ரோகம் என்பன வரும். கன்னிகளுக்கு விவாகம் நடக்கும். கஷ்டம் குறையும். வியாபாரிகள் புதிய முதலீடு செய்யலாம், மங்கலச் சிறப்பும் மன மகிழ்வும் உண்டாம்.

### விருச்சிகம்

இவர்களுக்கு இனபந்துக்களால் துன்பம் ,வாக்குக்கலகம், காரிய தாமதம் என்பன வரும். எடுத்தகாரியம் நிறைவேறுது. வியாபாரிகளாயின் புதிய முதலீடு செய்யலாம். கன்னியருக்கு விவாகம் நிகழும். பிரயாணத்தடை, தேகச்சூடு, நற்புகழ் வரும். தெய்வ வழிபாடு நன்மை பயக்கும்.

### தனு

இந்த ராசிக்காரர்களுக்கு காரியத் தடை, உதவிகிடையாமை, அற்ப ரோகம், தர்மச் செலவு, நரம்புப் பலவீனம் ஆகியன நிகழும். நல்லோர் சகாயம்கிட்டும். கன்னியராயின் விவாகப் பேச்சுக்கள் துவங்கும். வியாபாரிகள் லாபமீட்டுவர். மாணவராயின் கல்வியில் சம முன்னேற்றம் வரும்.

### மகரம்

இந்த ராசியினருக்கு எதிர்பாராத உதவி, பூமிலாபம, தனலாபம் என்பன கிடைக்கும். வியாபாரிகளுக்கு நன்மை. மாணவர்களாயின் கல்வி முன்னேற்றம். தொழில் அற்றவர்களுக்குத் தொழில் கிடைக்கும். விவாகமாகாதவர்களுக்கு விவாகம் நடக்கும். பிரயாணம் தாமதமாகி நிறைவுறும். தேகரோகமுண்டு. கணவன் மனைவியருக்கு நல்லுறவு. புத்திரசுகம்.

### கும்பம்

இவர்களுக்கு வீண் பகை, வாக்குக் கலகம், வீண்செலவு, காரியதாமதப், தர்மச்செலவு, வாத பீடை என்பன உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் வரும். ஆனல புதிய முதலீட்டைத் தவிர்க்கவும். அதிகாரம்உயரும்.சென்ற விடச்சிறப்பு. இனபந்துக்களால் நன்மை, பெண்களாற் சகாயம், சயன போசன சுகம் உண்டாம்.

### மீனம்

இந்தராசிக்காரர்களுக்கு தொழில் மாற்றம், மனக்கஷடம், வாக்குக் கலகம், நண்பர்களாற் சகாயம். அதிகார மேன்மை என்பன வரும். மன மகிழ்ச்சியைக் கைவிடாமை, உறுதி, அதிகாரம், மேன்மை, சென்ற இடங்களிற் செல்வாக்கு என்பன உண்டாம்.

மூலம்;–
சோதிட பரிபாலினி


மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
Timothy Brent.
Tony Marcel,
Alan-Corllians,
TORNADO
நவீன ஆயுதங்களைப் பாவித்துப் போராடும் மிகச் சிறந்த படம்

கார் ஓட்டுநர் தேவை

அனுபவமும், நேர்மையும் நற்பழக்கமுமுள்ள 50 வயதுக்கு மேற்பட்ட கார் ஓட்டுநர் வீட்டில் தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு வேண்டப்படுகின்றார். உணவு, இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். முன் அனுபவங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

நா. ஜெயரஞ்சிதன்,
ஷப்ரு
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உதயன், சஞ்சீவி பத்திரிகைகள்
பத்திரிகைத்துறையில் புகழ்பெற
வாழ்த்துகிறோம்!
★
சீமா சில்க்
இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
திருநெல்வேலி - யாழ்ப்பாணம்.
பொலியஸ்ரர், பருத்திப் புடைவைகள் தயாரிப்பில்
முன்னோடி உற்பத்தியாளர்கள்.

மின்சாரம் – உங்கள் கட்டுப்பாட்டிற்குள் செயல்பட!
சிறப்பான சேவகன் ஆபத்தான ஆசானுக செயல்படாதிருக்க!
★ சுந்தர்ஸன் உங்களுக்கு உத்தரவாதம், ★
சிறப்புமிகு சேவை வழங்குகின்றது!
TENBY ரென்பி சுவிட்ஸ் வகைகள்
S-Lon பைப்புகள் அதற்கான நெளிவுகளும் பொருத்துகளும்
மின்சார தேவைகள் எதுவானாலும் எம்மை நாடுங்கள்.
சுந்தர்ஸன் மார்க்கட் வியூ, மானிப்பாய்.
'ஸிங்கா எலெக்ரிக்கல்ஸ்' 4 அடி, 2 அடி டியூப் லைற் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தில்
இன மத பேதமின்றி நாட்டில்
சமாதானம் நிலைக்க
பிரார்த்திப்போமாக!
ஜோ. எகட்டன்
(செனித்) யாழ்நகர்.
'உன்னைப்போல் உன் பிறத்தியானையும்
நேசிப்பாயாக' — 'யேசு'

சஞ்சீவி
25-01-1936

கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தில்
இன மத பேதமின்றி நாட்டில்
சமாதானம் நிலைக்க
பிரார்த்திப்போமாக!
ஜோ. எகட்டன்
(செனித்) யாழ்நகர்.
'உன்னைப்போல் உன் பிறத்தியானையும்
நேசிப்பாயாக' — 'யேசு'

# "ஐயுந்திரிந்து விழியும் செருகிய" நிலையில் ஜனாதிபதி

தள்ளாடும் வயது. நோய்கள் பல உடலில் குடி கொண்டு விட்டன. மரணப் படுக்கையில் அவர் விழுந்து கிடக்கிறார்.

வைத்தியர்கள் நாடி பிடித்துப் பார்க்கின்றனர். அருகில் இருந்தோரைப் பார்த்து உதட்டைச் சுளிக்கின்றனர்.

வயோதிபரோ, மேலே பார்த்தபடி "கடவுளே! விரைவாக என்னை ஒரேயடியாகக் கொண்டு போக மாட்டாயா? இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக ஏன் என்னைச் சாக வைக்கிறாய்" — என்று அரற்றுகிறார்.

'இந்து' நாளிதழுக்கு அண்மையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்து இருக்கும் பேட்டியைப் படித்தவர்களுக்கு இந்த நினைவு நிச்சயம வராமற் போகாது.

அரசியல் நோயாளியான திரு. ஜெயவர்த்தனவின் 'நாடி'யைப் பிடித்துப் பார்க்க இந்த இணையாசிரியர் திரு. ராம் கொழும்பு வந்திருந்தார்.

கூட்டணியின் மாற்று யோசனைகள் சமர்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஜெயவர்த்தனவின் 'அரசியல் நாடி' எப்படி உள்ளது என்று பிடித்துப்பார்த்தார்.

'உண்மையில் இந்தியா, போராளிகளை அடக்கி வைத்துள்ளது. இலங்கைக்கு எதிர்ப்பாக இந்தியா நடக்குமானால் இலங்கையில் கொந்தளிப்பு உருவாகிவிடும்' என்று 'இந்து' இணையாசிரியர் திரு. ராம் சொன்னபோது, ஜனாதிபதி உணர்ச்சி வசப்பட்டு விட்டார்.

"எம்மை ஏன் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல வேண்டும். விரைந்து வந்து இலங்கையை இந்தியா பிடித்துக் கொள்ளலாம். அதைத்தான் நாமும் விரும்புகின்றோம். அப்படி இந்தியா வந்தால் எதிர்த்துப் போராடி வெல்வோம் அல்லது சாவோம்." — இப்படி ஜனாதிபதி சொன்னார்.



வரகதியான வெளியுக்குத் தள்ளப்பட்ட நிலையில் ஜனாதிபதி உதிர்த்த வார்த்தைகளா இவை?

'ஐயுந்திரிந்து விழியும் செருகிய' நிலையில் தான் அவரின் 'அரசியல் நாடி' இன்னும் இருக்கிறது என்பதை இது புலப்படுத்துகின்றதோ!

சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமா அம்மையாருக்கு புத்தாண்டில் குடியுரிமை வழங்கப்பட்டது.

மேலிடத்தின் உத்தரவின்மீது அம்மையாரின் வீட்டுக்கு ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் போனார்கள்.

ரோஸ்மீட் பிளேஸ் வீட்டில் வைத்து அம்மையாரைப் படம் பிடித்தார்கள்.

அம்மையார் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில பேசுவதையும் படம் பிடித்தார்கள்.

தேர்தல் மூலம் நாடாளுமன்றம் செல்வதையே தான் விரும்புவதாகக் குழுக் கூட்டத்தில் அவர் சொன்னார் அதையும் ரூபவாஹினி பதிவுசெய்து கொண்டது.

மாலை ரூபவாஹினி ஒளிபரப்பில் இப்பேட்டி வரும் என்று அம்மையாருக்கு உறுதி கூறப்பட்டது.

ஆனால் அது அன்று இரவு ஒளிபரப்பாகவில்லை மீண்டும மேலிடத்து உத்தரவு அந்த நிகழ்ச்சி 'கொல்லப்பட்டு' விட்டது (That programme is killed) என்று அறிகிறோம்.

அம்மையாருக்குக் குடியுரிமை வழங்குவது, மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குவது — இவைபற்றி ஆளும் கட்சிக்குள் ஏகமனதான ஆதரவு இருந்ததாக வெளியில் தான் கூறப்படுகின்றது.

'உள்'ளே இடம் பெற்றது சிலருக்குத்தான் வெளிச்சம்

**உள்ளும் புறமும்**
**- குறுமுனி -**

அம்மாவுக்குக் குடியுரிமை வழங்குவதை சில அமைச்சர்களே எதிர்த்தனராம் இதை ஜனாதிபதியே 'இந்து' பேட்டியில் கூறிவிட்டார்.

அதுபோன்று மலையகத் தமிழர் குடியுரிமை பெறுவதையும் அமைச்சா காமினி திஸநாயகா உட்பட முக்கியஸ்தர்கள் எதிர்த்தனராம்.

மலையகத் தமிழ் எம்பிக்கள் எண்ணிக்கை கூடிவிட்டால் தங்கள் செல்வாக்கு சரிந்துவிடும் என்ற எண்ணமோ தெரியவில்லை.

இந்த எதிர்ப்புக்களை எல்லாம் எப்படி ஜனாதிபதி சமாளித்தார்?

சாலியில் ஜன 13 இல் நடந்த கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார்.

'ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பேன் பிரதமர் ராஜீவ் காந்தி தனது கட்சி அரசியல் வாதிகள் ஊழல்களில் ஈடுபடுவது பற்றி பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் பேசிய பேச்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிட்டு வெளியிடுவேன்' இப்படி அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி சொன்னார்.

எதிர்ப்பு அடங்கி விட்டது. எல்லோரும் இப்போது "கப்சிப்";

**நாவற்குழி...**
(1 ஆம் பக்க தொடர்ச்சி)

தீர்க்கப்பட்டன.

சுமார் நூறு குண்டுகள் கைதடிப் பக்கம் வந்து விழுந்ததாகக் கூறப்பட்டது.

இதன் பின்னர் நாவற்குழி முகாமில் ஹெலிக்கொப்டர் ஒன்று வந்திறங்கியது.

சற்று நேரத்தில் முகாமை விட்டு மேலெழுந்து புறப்பட்ட ஹெலிக்கொப்டர் மீது ரொக்கெட் லோஞ்சரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தாக்குதலையடுத்து ஹெலிகொப்டர் உயர எழும்பி பின்வாங்கியதாகக் கூறப்படுகிறது.

எனினும் சற்று நேரத்தின் பின்னர் ஹெலிக்கொப்டரிலிருந்து நாலாபுறமும் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

இலக்கின்றித் தீர்க்கப்பட்ட குண்டுகள் தீப்பிழம்புகளாய் மழை பொழிந்தது போல் நிலத்தை நோக்கிச் சீறின.

அடுத்தடுத்து வந்து விழுந்த தீப்பிழம்புகளால் நாவற்குழி, கைதடி, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு, அரியாலை ஆகிய பகுதிகள் அல்லோல கல்லோலப்பட்டன.

மக்கள் பதற்றமுற்று அப்பகுதியிலிருந்து பாதுகாப்புத் தேடி வெறிடம் செல்கிறார்கள்.

கல்வியங்காடு, நாயன்மார் கட்டுப்பகுதியில் இருந்த மக்கள் மூடை முடிச்சுகளுடன் நல்லூர், யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு இரவோடு இரவாகக் குடிபெயர்ந்தனர்.

பலர் ஹெலிக்கொப்டர் சூடுகளுக்கும் குண்டுகளுக்கும் பலியாகியிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

## செய்திச் சாரம்

**ஜனவரி 18 - 24**

**சனி**

● தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளை விரைவாகப் பரிசீலனை செய்வதற்கு இலங்கை அரசு உயர்மட்டக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

● தொண்டமானாறிலும் மோட்டோர் ஷெல் தாக்குதல்; வீடுகள், கடைகள் தீக்கிரை.

● பாதுகாப்பு வலயம் பற்றி பதற்றம் வேண்டாம்—இப்படி வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி அறிவிப்பு.

**ஞாயிறு**

● யாழ்ப்பாணத்தில் மக்கள் செயலுக்கக் கமிட்டி அங்குரார்ப்பணம்.

1,000 மீட்டர் பாதுகாப்பு வலயம் வாபஸ் வாங்கப்பட வேண்டும்; கோட்டையில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் — என்று கோரி கமிட்டி எதிர்ப்பு இயக்கம் நடத்த முடிவு.

● மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் போராளிகள் — படையினர் மோதினர். 15 தமிழர் பலி.

● இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவிப்பு

**திங்கள்**

● ஏழாலை, குரும்பசிட்டிப் பகுதிகளில் இராணுவ அத்துமீறலைக் கண்டித்து மக்கள் பேரணி நடத்தப்பட்டது.

● பாதுகாப்பு வலயம் வந்த பின்னர் யாழ் நகரில் பதற்றம் நிலவியது

● மாற்றுயோசனைக்குப் பதில் கிடைக்கும் வரை இலங்கை அரசுடன் பேச்சுக்கு இடம் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவிப்பு.

**செவ்வாய்**

● பாதுகாப்பு வலயத்தை ஆட்சேபித்து யாழ் முஸ்லிம்கள் உணர்ச்சி பூர்வமான பேரணி நடத்தினர்.

● யாழ் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா முதலாவது செய்தி மாநாட்டை நடத்தினார்.

**புதன்**

● யாழ் நகரில் பூரண ஹர்த்தால், அரச அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம். இதனால் யாழ் செயலகம் இயங்கவில்லை.

● வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ் இளைஞர் கஷ்டங்கள் பற்றி கண்காணிப்புக் குழு அறிக்கையில் கவலை தெரிவித்தது.

**வியாழன்**

● தெல்லிப்பளை-வயாவிளான் பகுதிகளில் போராளி — படையினர் நேரடி மோதல் 17 பேர் மரணம்; சுமார் 25 பேர் காயம்.

● பாதுகாப்பு வலயம் ரத்து இல்லை — நாடாளுமன்றத்தில் தேசியப்பாதுகாப்பு அமைச்சர் லலித் அறிவிப்பு.

● இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பாதீர்!— மேற்கு பேர்லின் அகதி விவகார சபை, மேற்கு ஜெர்மன் அரசை இப்படிக் கேட்டுள்ளது.

**வெள்ளி**

● மூன்றுவது தினமாக யாழ். செயலகம் முன் மறியல் போராட்டம் நடந்தது.

● தெல்லிப்பளை, வயாவிளான், வீமன்காமம் பகுதிகளில் இரண்டாவது தினமாகப் பதற்றம் நிலவியது.

குடியரசுத் தினமும் சண்டிக்காரும்

# ராஜீவ் எதிர்நோக்கும் மற்றொரு சோதனை

பஞ்சாப் ஒப்பந்தத்தின் முக்கிய சரத்து அமுல் செய்யப்படுவதற்கு இன்னும் ஒரு நாள் மட்டும் இருக்கும் இவ்வேளையில் பஞ்சாப்பிலும் ஹரியானாவிலும் பதற்ற நிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

பஞ்சாப்பின் 54 கிராமங்கள் ஹரியானாவிடம் ஒப்படைக்கப் படுவதற்கு எதிராகப் பஞ்சாப்பில் தீவிரவாத சீக்கியர்கள் மீண்டும் போர்க் கொடி உயர்த்தி உள்ளனர் — ராஜீவுக்குச் சார்பான சுர்ஜித்சிங் பர்னாலா அரசாங்கம் தீவிரவாதிகளைக் கண்டபடி சிறையில் தள்ளி வருகிறது.

அதே போன்று தலைநகர் சண்டிக்கார் கைமாறுவதற்கு எதிராக இந்துக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஹரியானாவில் பரந்த அளவில் எதிர்ப்பு இயக்கம் இருந்து வருகிறது.

ஒப்படைக்கப்படும். அதே போன்று பஞ்சாப்பில் உள்ள இந்தி மொழி பேசும் 54 கிராமங்கள் ஹரியானாவிடம் ஒப்படைக்கப்படும்.

சண்டிகார் ஹரியானாவுக்குப் பஞ்சாப்புக்கும் பொதுவான தலைநகராக இதுவரை இருந்து வந்தது.



சாப் ஒப்பந்தத்தையே சாரும்.

இந்திராகாந்தி கொலை வழக்கில் மூன்று சீக்கியர்களுக்கு புதுடில்லி நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை அளித்திருப்பதும் தற்போதைய நெருக்கடி மேலும் வலுப்பதற்குக் காரணம் ஆகும்.

பொற்கோயில் முற்றுகைக்கு உத்தரவிட்டு 5 மாதங்களின் பின்னர் அதாவது 1984 அக்டோபரில் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரில் இருவர் நிரபராதிகள் என்று புதுடில்லியில் சீக்கிய கோயில்களை நிர்வகிக்கும் கமிட்டியின் பொதுச் செயலாளர் அறிக்கை விடுத்துள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட மூவரில் சத்வந்சிங் மட்டுமே குற்றவாளி என்று இந்தக் கமிட்டி கருதுகிறது.

பஞ்சாப் ஒப்பந்த அமுல், இந்திராகாந்தி கொலைவழக்கு, மரண தண்டனை ஆகியவை நாளைய குடியரசுத் தினக் கொண்டாட்டங்களில் என்றும் இல்லாதவாறு பதற்ற நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

## உலக உலா
**என்.பி.சீலன்**

பஞ்சாப் முதல்வர் சுர்ஜித்சிங் பர்னாலாவும் ஹரியானா முதல்வர் பாஜன்லாலும் ஒருவருக்கு எதிராக மற்றவர் அறிக்கை விடும் அளவுக்குக் கடந்த சில தினங்களுக்கு முன்பு நிலைமை மோசமடைந்திருந்தது.

பஞ்சாப் ஒப்பந்தம் நடைமுறைக்கு வருமா? என்று அரசியல் வட்டாரங்களில் கேள்விக் குறி எழுப்பும் அளவுக்கு அந்த இரு மாநிலங்களிலும் காரியங்கள் நடைபெற்று வந்தன.

என்ன நடந்தாலும் ஒப்பந்தத்தின் முக்கிய சரத்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வரும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

இந்திய குடியரசுத் தினமும் ஒப்பந்தத்தின் முக்கிய சரத்தான சண்டிக்கார் கைமாற்றமும் ஒரே நாளில் அமுலுக்கு வருவதே இந்த விவகாரம் சூடு பிடிக்கக் காரணம் ஆகும்.

குடியரசுத் தினத்தை முன்னிட்டு தலை நகர் புதுடில்லியில் முன் எப்போதும் இல்லாதவாறு ஆயுத படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

குடியரசுத்தினத்தில் கிரனேட்டுகளை வீசி கூட்டங்களைக் குழப்பத்திட்டமிட்டிருந்தார் என்று கூறப்படும் தீவிரவாத சீக்கியர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஹர்ஜிந்தர்சிங் என்ற இந்தத் தீவிரவாதி நீண்ட காட்களாக இந்தியப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பஞ்சாப் ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்டது.

சீக்கிய மிதவாதியான அகாலிதள் தலைவர் லோங்கோவாலும் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ராஜீவ் காந்தி பதவிக்கு வந்த பின்னர் மேற்கொண்ட அதி துணிச்சலான நடவடிக்கையாக இது அப்போது கருதப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஹரியானாவின் தலைநகர் சண்டிக்கார் பஞ்சாப்பிடம் நாளை

இந்த 54 கிராமங்களிலும் உள்ள இந்தி மொழி பேசும் மக்கள் பற்றி ஒரு கணக்கெடுப்பு நடத்துவதற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம் மத்தியூ கமிஷன் அமைக்கபபட்டது.

இந்தக் கமிஷன் இன்று சனிக்கிழமை தனது அறிக்கையை ராஜீவ் காந்தியிடம் சமர்ப்பிக்கிறது.

இந்தக் கிராமங்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட சமயம் ஹரியானா தனது பொலீஸ்படையை பஞ்சாப் எல்லைக்கு அனுப்பி இருந்தது. இதனை பஞ்சாப் முதல்வர் யுத்தப் பிரகடனம் என்று வர்ணித்தார்.

இந்திய மாநிலங்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதும் நிலைமையை உருவாக்கிய "பெருமை" இந்த பஞ்

**நேற்றும்...**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தில் இறந்த ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களே அவ்விருவரும் ஆவார்கள்

வயாவிளானிலும் நேற்று ஹெலிக்கொப்டர் ஒன்றின் மீது ரொக்கெட் லோஞ்சர் தாக்குதல் நடத்தப்பட்டது.

## நினைவூட்டுகிறோம்

இன்று வெளியாகும் SATURDAY REVIEW ஆண்டு மலரில் மனோகரன் & வெற்றிவேல் ஸ்தாபனமும் J. C. C Ltd ம் இணைந்து கட்டிட நிர்மாணம் சம்பந்தமான அனுபந்தம் வெளியிடுகிறார்கள் இவ்வனுபந்தத்தைப் படித்து உங்கள் அபிப்பிராயங்கள், ஆலோசனைகளை எழுதி அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

மனோகரன் & வெற்றிவேல்
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

J. C. C Ltd,
உரும்பராய் சந்தி,
உரும்பராய்.

## நீத்தார் பட்டியல்

### இராமலிங்கம் சங்கரப்பிள்ளை

யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. இராமலிங்கம் சங்கரப்பிள்ளை காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதம், ஆறுமுகம், கனகசபை, சீனித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயலக்ஷ்மி, விபுலானந்தா (ஜெர்மனி), சண்முகானந்தா (இத்தாலி), கிருபானந்தா (இத்தாலி), தயானந்தா, சிறிரமணானந்தன் (ஜேர்மனி). பிரேமானந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரனின் (உதயன் பத்திரிகை) அன்பு மாமனாரும் ஆதிரையன், இளந்திரையன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 25-1-86 சனிக்கிழமை திருநெல்வேலி மேற்கு நாவலடி ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பி.ப 3 00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: எஸ் .எம். பாலச்சந்திரன்

இதோ
அறிமுகப்படுத்துகின்றோம்!
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
இன்சுவை, பல்சுவை, தரம்,
தராதரம்
இவற்றை ஒரே நேரத்தில்
உங்கள் மழலைச் செல்வங்களுக்கும்
உங்கள் இல்லங்களுக்கு வருகைதரும்
விருந்தினருக்கும் களிப்பூட்ட பரிமாறுங்கள்:
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
என்றும் சிறந்ததையே வழங்கும்
செனித் மார்கட்டிங்
ஸ்தாபனத்தின் மற்றும் ஒரு புது முயற்சி
ஏகப் பிரதிநிதிகள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.
ஏக கையிருப்பாளர்கள்:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்)
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
மற்றவர்கள் செய்யும் சத்தியத்தை
நாங்கள் காப்பாற்றுகின்றோம்.
விலை விபரங்கள்:

| | |
|---|---|
| பிளாஸ்டிக் கப் (வனிலா) | 4-50 |
| சொக்கலேட் | 4-75 |
| பெமலி புளக் | 23-50 |
| கலன் | 140-00 |

கூடிய கொள்முதலுக்கும், விசேட ஓடர்களுக்கும் சலுகைகள் உண்டு.
விபரங்களுக்கு:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்) யாழ்ப்பாணம்.

இன்று
மகத்தான திறப்பு விழா
சைவ உணவகம்
ராஜ்மஹால்
சைவாள் கபே
53, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சுவை, சுகாதாரம், அரங்க அமைப்பு
இவை அனைத்தும் தமிழ்நாட்டுப் பாணியில்
யாழ்நகர் மக்களுக்கு
அறிமுகப்படுத்துகிறோம்.
RAJMAHAL
VEGETARIAN CAFE
53, Kasthuriar Road, JAFFNA,
உங்கள் மங்கள வைபவங்களுக்கு சிற்றுண்டி வகைகளை தமிழ்நாட்டுப் பாணியில் வழங்கி மகிழ்ந்திடுங்கள்.
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
இங்ஙனம்
ராஜ்மஹால் சைவாள் கபே.
T'Phone: 22378

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 8 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 25-01-1986

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org